# குழப்பம் விளைவிப்போரை கைது செய்ய உத்தரவு

Registered as a News Paper in Ceylon விலை சதம 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

பா.ம பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 227
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் புரட்டாதி 10 றஜபு 24 சனிக்கிழமை (26-9-70)

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 18-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும்.
தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

யாழ்ப்பாணம், சனி

**வடபகுதியில் அமைதிக்கு பங்கம் விளைவிக்கும் செயல்களில் ஈடுபடுவோரையும், அச்செயல்களில் ஈடுபட முயற்சிப்போரையும் உடனடியாக கைதுசெய்யும்படி, வடபகுதி பொலிஸ் நிலையங்களுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது இரகசிய பொலிஸாரின் அறிக்கையைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

கைது செய்யப்படுவோர் விசாரணை முடியும்வரை றிமாண்டில் வைக்கப்படுவார்கள் என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்,

கொழும்பு இரகசியப் பொலிஸாரும், உள்ளூர் இரகசியப் பொலிஸாரும் பொலிஸ் அதிகாரியிடம் சமர்ப்பித்துள்ள அறிக்கையில் பல தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன,

உரும்பராய் வெடிகுண்டு சம்பவத்திலிருந்து வடபகுதியில் நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்தே மேலிடத்தின் அங்கீகாரத்துடன் மேற்கண்டவாறு உத்தரவிடப்பட்டுள்ளதாகப் பொலிஸ் அதிபர் தெரிவித்தார்.

வடபகுதியில். 4 வாலிப முன்னணிகள் இயங்கிவருவதாகவும் திட்டமிட்டு செயல்படுவதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது

வடபகுதிக்கு உத்தியோகபூர்வமாக விஜயம் செய்யும் மந்திரிகளுக்கும், அரசாங்க பிரமுகர்களுக்கும் எதிராக கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் செய்ய வாலிபர் இயக்கமொன்று திட்டமிட்டிருப்பதாகவும் பொலிஸாரின் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இனபேதங்களை உருவாக்கும்விதத்தில், துண்டுப்பிரசுரங்களையும், சுவரொட்டிகளையும் வெளியிடுவதற்கும், கைக்குண்டுகள் தயாரிப்பது போன்ற இரகசிய வேலைகளிலும், வடபகுதியிலுள்ள பெயர்ப்பலகைகளில் சிங்கள எழுத்துக்களை அழிக்கும் முயற்சிகளிலும், பொது மேடைகளில் வன்முறையை தூண்டக்கூடிய பேச்சுக்களை பேசுவதிலும், இந்த வாலிப இயக்கங்கள் ஈடுபட்டுள்ளதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாம்.

## பண்டாரநாயக்கா நினைவு மண்டபம்

# 7,500 தொண்டர்களுடன் நேற்று வேலைகள் ஆரம்பம்!

கொழும்பு, வெள்ளி

கொழும்பில் பண்டாரநாயக்கா நினைவு தின மண்டபம் நிறுவுவதற்கான வேலைகள் இன்று ஆரம்பமாகின ஒவ்வொரு தொகுதிகளிலிருந்தும் 50 பேர் வீதம் 7,500 தொண்டர்கள் பெருந்தொகை யானசெலவில் அமையவிருக்கும்இந்த நினைவு தினமண்டபத்திற்கான இந்தை துப்புரவுசெய்யும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

சீன உதவியுடன் நிறுவப்படவிருக்கும் இந்த மண்டப நிர்மாணச் செலவைக் குறைப்பதற்குச் சிரமதான முறையில் அமைக்க மேலும் பல தொண்டர்கள் ஈடுபடுத்தப்படவிருப்பதாகவும் இந்தத் தொண்டர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்ட புத்தகம் மண்டபத்துள் வைக்கப்படுமென்றும் வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் தெரிவித்தார்.

கட்டுநாயக்கா விமான நிலையம், பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையம் எனப் பெயர் மாற்றப்படலாமென அறியப்படுகிறது. என்று பண்டாரநாயக்கா நினைவுதின விழாக்குழுவினர் வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரமொன்றில் தெரிவித்துள்ளனர்

## இன்று நாடெங்கிலும் நினைவுவிழா

காலஞ்சென்ற இலங்கைப் பிரதமர் அமரர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பதினொராவது சிரார்த்த தினம் நாடெங்கிலும் இன்று சிறப்பாகக்கொண்டாடப்படுகிறது. தலைநகரிலும், நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நாள்பூராவும் நினைவுதின நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

கொழும்பிலிருந்து மறைந்த பிரதமர் பண்டாரநாயக்காவின் சமாதி அமைந்துள்ள கொரகொல்லைக்கு வதுடன் இன்றைய நினைவு தின நிகழ்ச்சிகள் தலைநகரில் ஆரம்பமாகின்றன.

இம்முறை பண்டாரநாயக்கா நினைவுதின விழாக்கள் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும் சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

இன்று மாலை மக்கள் பிரதிநிகள் சபை வளவிலுள்ள அமரர் பண்டாரநாயக்கா சிலைக்கு மலர்வளையம் சாத்தும் நிகழ்ச்சி இடம் பெறும் இதனையடுத்து கொழும்பு மாநர சபையில் பண்டாரநாயக்காபில் நினைவுதின பொதுக் கூட்டமொன்று நடைபெறும்.

### யாழ்ப்பாணத்தில்

யாழ்ப்பாணத்தில் இன்று மாலை பண்டாரநாயக்கா நினைவுதின விழா நடைபெறவிருக்கிறது. யாழ். நகரமண்டபத்தில் வடபிரதேச ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. எம், துரைராசா தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் அமைச்சர்கள், ஸி. குமாரசூரியர், கே. பி. ரத்ன

# ஆசிரியைக்கு ரூ. 500 பிணை

## ரட்சண்யசேனையில்பணிப்பெண்

### பாடசாலைக் கிணற்றுள் கிடந்த சிறுமியின் மரணத்தின் எதிரொலி

யாழ்ப்பாணம், சனி

கில்னர் ஒழுங்கை பாடசாலைக் கிணற்றினுள்இறந்து கிடந்த நாகேஸ்வரி என்ற எட்டுவயதுச் சிறுமியின் மரணம் சம்பந்தமாகச் சந்தேகத்தின்மீது கைது செய்யப்பட்ட பாடசாலை வளவில் குடியிருக்கும் உதவி ஆசிரியையான திருமதி சக்காரியா நேற்றுமரணவிசாரணை அதிகாரி திரு நா. இராசநாயகத்தினால் 500 ரூபாய் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார், விசாரணையின் போது சாட்சியமளித்த திருமதி சக்காரியாவின் வேலைக்காரச் சிறுமியான 12 வயது மீனாட்சியை இரட்சண்ய சேனை விடுதியில் வைக்குமாறு மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார்,

கில்னர் ஒழுங்கையிலுள்ள பாடசாலை வளவினுள் உள்ள கிணற்றுள் அந்தப் பாடசாலையில் படித்த நாகேஸ்வரி என்ற எட்டு வயதுச் சிறுமி சென்ற புதன்கிழமை பிற்பகல் இறந்து கிடக்கக் காணப்பட்டு வெளியேஎடுக்கப்பட்ட செய்தி வாசகநேயர்கள் அறிந்ததே.

நாகேஸ்வரியின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி சிறுமியின் தந்தை, பாடசாலைத்தலைமை

(4-ம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீமாவோ அடுத்த மாதம் ஐ. நா.செல்வார்!

### லண்டனில் பீபிசிஸ் தகவல்

லண்டன், செப். 25

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அடுத்த மாதம் பிரிட்டனுக்கும் ... டயஸ் பண்டாரநாயக்கா இந்தத்தகவலை வெளியிட்டார்.

நியூயோர்க்கிற்குப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன.

கொழும்பிலிருந்து மறைந்த பிரதமர் பண்டாரநாயக்காவின் சமாதி அமைந்துள்ள ஹொரகொல்லைக்கு இன்றுகாலை ஊர்வலம்ஒன்று சென்று மலர்வளையம் சாத்தி அஞ்சலி செலுத்து

ள்ள அமரர் பண்டாரநாயக்கா சிலைக்கு மலர்வளையம் சாத்தும் நிகழ்ச்சி இடம் பெறும் இதனையடுத்து கொழும்பு மாநரசபையில் பண்டாரநாயக்காவின் உருவப்படம் திரைநீக்கம் செய்துவைக்கப்படும் இதன் பின்னர் கொழும்

படத்தில் ... ப்ரதேச ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அமைப்பாளர் திரு. எம். துரைராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் அமைச்சர்கள், ஸி. குமாரசூரியர், கே. பி. ரத்னாயக்கா ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

தினமண்டபத்தில்நடக்கான இதனை துப்புரவுசெய்யும் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

சில உதவியுடன் நிறுவப்

எனப் பெயர் மாற்றப்படலாமென அறியப்படுகிறது. என்று பண்டாரநாயக்கா நினைவுதின விழாக்குழுவினர் வெளியிட்டுள்ள துண்டுப் பிரசுரமொன்றில் தெரிவித்துள்ளனர்

கப்பட்டார், விசாரணையின் போது சாட்சியமளித்த திருமதி சக்காரியாவின் வேலைக்காரச் சிறுமியான 12 வயது மீனாட்சியை இரட்சண்ய சேனை விடுதியில் வைக்குமாறு மரணவிசாரணை அதி

# ஐ. நா.செல்வார்!

## லண்டனில் பீலிக்ஸ் தகவல்

லண்டன், செப். 25

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அடுத்த மாதம் பிரிட்டனுக்கும் ஐ. நா. சபைக்கும் விஜயம் செய்வார்.

லண்டனில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில், பொதுநிர்வாக உள்ளூராட்சி உள்நாட்டமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா இந்தத்தகவலை வெளியிட்டார்.

நியூயோர்க்கிற்குப் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா விஜயம் செய்யும் பொழுது பிரிட்டிஸ்பிரதமர் அவருக்கு அழைப்பு விடுத்திருந்தார் என திரு. பீலிக்ஸ் தெரிவித்தார்.

## மண்டதீவு கொலை வழக்கு

# ‘இறந்தவர் பக்திப்பாடல் பாட எதிரி சினிமா பாட்டு பாடினர்’

யாழ்ப்பாணம், சனி

‘இறந்தவரான வெற்றிவேலு கள்ளை வைத்துக் கொண்டு, ‘முருகா’ என்று பக்திப்பாடல் பாடினர். அப்போது எதிரியும் கணநாதபிள்ளையும், நின்றுகொண்டு கள்ளுக்குடித்தனர். எதிரி கையில் வில்லுக்கத்தி இருந்தது. எதிரி சினிமாபாட்டு பாடினர். தான்பாடுப் பாட்டுத்தான் நல்லது என எதிரி கூறினர். அதைத்தொடர்ந்து நடந்த கைகலப்பின்போது எதிரி நாலு ஐந்து தடவை வெற்றிவேலுவை குத்தினர்.

மண்டதீவு கொலை வழக்கில் சாட்சியமளித்த ஆறுமுகம் மேற்கண்டவாறு கூறினர். இவ் வழக்கு நேற்றுக் காலை வடபகுதி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் ஒ. எல். டி கிரெஸ்டர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் மண்டதீவில் 69ம் ஆண்டு ஜூலை 19ம் தேதி நாகலிங்கம் வெற்றிவேலுவைக் கொலை செய்ததாக கந்தையா இரத்தினம் என்பவர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிசார்பில் அட்வகேட் கே.வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் ஆர். விஸ்வநாதனின் அனுசரணையுடன் ஆஜராஞர். எதிரிக்காக அரசாங்கத்தால் வழக்கறிஞர் சிற்றம்பலம் நியமிக்கப்பட்டிருந்தார்.

ஆறுமுகம், சாட்சியமளிக்கையில் கூறியதாவது. கணபதிப்பிள்ளையின் கள்ளுக் கொட்டிலுக்கு சம்பவம் நடந்த தினம் வெற்றிவேலுவுடன் போனேன் அரைப்போத்தல் கள்ளுக் கேட்டேன். வெற்றிவேலுவும் அரைப்போத்தல் கள்ளு கேட்டார். பக்கத்திலுள்ள கொட்டிலுக்கு போய் குடித்துக்கொண்டிருந்தோம் கள்ளுக்கொட்டிலில் அரிக்கன லாம்பு இருந்தது. அப்போது வேறு ஆட்கள் இல்லை. எதிரியை முன்னர் தெரியும் சிறிது நேரத்தால் எதிரியும்கணநாதபிள்ளையும் வந்தார்கள். நின்றுகொண்டு கள்ளுக்குடித்தார்கள். இறந்தவர் முருகா என்ற பக்திப் பாடல் பாடும்போது எதிரியும் அங்கிருந்தார். எதிரியும் சினிமாப் பாட்டு பாடினர். தான் பாடும் பாட்டு நல்லதென எதிரி கூறினர்

கணநாதபிள்ளை கள்ளை இறந்தவர் மீது வீசியபோது எனக்கும் பட்டது. பின் காலால் மண்ணை வீசினர். இறந்தவர் நீங்கள் செய்வது சரியோ என்று கேட்டார், குற்றத்தை ஒப்புக்கொண்டால் பொறுப்பேன் என்றூர். பின் இறந்தவரும் கணநாதபிள்ளையும் மல்லுப்பிடித்தனர். சதானந்தன், நமசிவாயம் ஆகியோர் விலக்குப்பிடித்தனர். இறந்தவர்கொட்டிலுக்குள்போய் நின்றூர். கணநாதபிள்ளை அவரைப்போய் பிடித்தபோது இறந்தவர் லாம்பை எடுத்து விசுக்கினர். லாம்பு கணநாதபிள்ளையின் காலில் பட்டது. அதோடு லாம்பு அணைந்தது. பின்னரும் மல்லும் பிடித்தார்கள் எதிரியும் போய் அவர்களுடன் மல்லுப்பிடித்தார். பின் எதிரி நிலத்துடன் இறந்தவரை அழுத்திப்பிடித்து நாலு, ஐந்து தடவை கத்தியால் குத்தினர், அதன் பின் எல்லாம் சரிவா என்று கூறிவிட்டு போனூர். இருவரும் போய்விட்டனர். இறந்தவரின் கையை தூக்கி பார்த்தேன். மறுமொழி ஒன்றும் இல்லை. நான் அங்கு நின்றேன் பொலிசுக்கு

வாக்குமூலமளித்தேன்.

விசாரணை இம்மாதம் 27-ம் திகதி வரை ஒத்திப் போடப்பட்டுள்ளது.

## இராணுவத்தினரின் தயாள சிந்தை

அம்பன், வெள்ளி

கர்ப்பிணி ஒருவருக்குத் தக்க சமயத்தில் கைகொடுத்து உதவியதைத்தொடர்ந்து இப்பகுதிப் பொதுமக்களின் நல்லெண்ணத்தையும் பாராட்டுதலையும் பெற்றனர் இராணுவத்தினர்.

போக்குவரத்து, வாகன வசதியற்ற பொற்பத்தை என்ற இடத்தைச் சேர்ந்த பீட்டர் செல்வராசா என்பவர் பிரசவவேளை நெருங்குவதை அறிந்து நள்ளிரவில் தமது மனைவியைக் கால்நடையாக அம்பன் ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றுராம். அச்சமயம் கடற்கரையில் ஜீப்பில் ரோந்து வந்த இராணுவத்தினர் கர்ப்பிணியின் பரிதாப நிலையைக்கண்டு தமது ஜீப் வண்டியில் அவரை ஏற்றிச்சென்று அம்பன் ஆஸ்பத்திரியில் சேர்த்தனராம். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட கர்ப்பிணி மறுநிமிடமே குழந்தையைப் பிரசவித்தாராம்.

பொற்பத்தையிலிருந்து அம்பன் ஆஸ்பத்திரி 8 மைல் தொலைவிலுள்ளது. கால்நடையாக அவர்கள் செல்வதாயிருந்தால் சுமார் 4 மணித்தியாலங்கள் பிடித்திருக்கும். அச்சமயத்தில் இராணுவத்தினர் வந்து உதவியிராவிடில் பிரசவத்தாயும் கணவரும் மிக்க இக்கட்டான நிலைக்குள்ளாகியிருப்பர். இராணுவத்தினரின் இவ்வரிய சேவைபற்றிப் பொதுமக்கள் பாராட்டுத் தெரிவித்தனர்.

# நாடு பூராவும் 2 நிமிடம் மௌனம் அனுஷ்டிப்பு

காலஞ்சென்ற பிரதமருக்கு அஞ்சலி செலுத்துமுகமாக நாடு பூராவும் இன்றுகாலை 2 நிமிடங்கள் மௌனம் அனுஷ்டிக்கப்படும், வாகனப் போக்குவரத்துக்கள் யாவும் இன்றுகாலை 7-55 தொடக்கம் 7-57வரை நிறுத்திவைக்கப்படும், இதை நடைமுறைப்படுத்தும் நோக்குடன் நாடு பூராவும் சகல வீதிகளிலும் முக்கிய சந்திகளிலும் பொலிசார் நிறுத்தப்படுவர்,

யாழ்ப்பாணத்திலும் சகல வீதிகளிலும் முக்கிய சந்திகளிலும் பொலிசார் நியமிக்கப்படுவர், காலை 7-55 முதல் 7-57 வரை வாகனங்கள் எதுவும் ஓடுவதிலிருந்து நிறுத்தப்படுவதுடன் பாதசாரிகளும் காலஞ்சென்ற பிரதமருக்கு மரியாதை செலுத்துமுகமாகமௌனம் அனுஷ்டிப்பர்.

## புதிய முத்திரை

கோட்டை, வெள்ளி

கடந்த 5 வருடகாலத்தில் மக்கள் மீது சுமத்தப்பட்ட இன்னல்களை தீர்க்கும் வழிவகைகளை மக்கள் அரசாங்கம்ஆராயவிருக்கிறது என்று பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காதெரிவித்தார்

மக்கள் வெற்றித்தினத்தை சித்தரிக்கும்வகையில் தபால் பகுதியினரால் வெளியிடப்பட்ட 10சத முத்திரியையும் தபாலுறையையும் நேற்று வெளியிட்டு வைத்துப் பேசுகையில் பிரதமர் இவ்வாறு கூறினர்.

5வருடகாலத்தில் இருந்து வந்த குறைகளை மக்கள் அரசாங்கம் பதவியெற்ற 4மாத காலத்தில் தீர்த்துவைக்க முடியாது. ஆயினும் மக்கள் அரசாங்கம் பதவிக்காலத்தில் மக்களின் இன்னல்களைத் தீர்த்துவைக்கமுடியும் எனத் திடமாக நம்பிக்கைபூண்டுள்ளேன் என்றும் பிரதமர் கூறினர்.

## திரைப்படம்

ஞாபகார்த்த வைபவங்களைத் திரைப்படமாக்குவதற்கு ஜேர்மன் ஜனநாயக குடியரசு சினிமாஸ்தாபன டைரக்டர் ஒருவர் இலங்கை வந்துள்ளார் கொழும்பில் நடக்கும் உத்தியோகபூர்வமான வைபவங்களையும் பொது வைபவங்களையும் அவர் திரைப்படமாக்குவார்,

## தபாலமைச்சர் விடுத்த செய்தி

கோட்டை, சனி

தபால் தந்தி அமைச்சர் திரு செ. குமாரசூரியர் நாட்டு மக்களுக்கு விடுத்துள்ள செய்தியில் கூறியுள்ளதாவது;

இந்நாட்டில் வாழும் சகல இன மக்களும் இலங்கையர் என்ற எண்ணத்தை ஏற்படுத்தி. சிங்கள, தமிழ் மக்களிடையே பரஸ்பர ஒற்றுமையை உண்டாக்க முயன்றவர் திரு, பண்டாரநாயக்கா இந்நாட்டில் வாழுகின்ற மக்களிடையே பொதுமையான தேசியத்தை உருவாக்க வேண்டுமென்ற அவரது இலட்சியத்தை கொள்கைகளை தீவிரவாதிகளும், வெறியர்களும் சின்னபின்னப் படுத்திவிட்டனர்.

உள்நாட்டுப் பல மேடைகளில் மட்டுமல்ல ஐ. நா. விலும் இலங்கையின்பழமைவய்ந்த இலட்சிய கலாசார பெருமைகளை யெல்லாம் ஒலிக்கச்செய்து இலங்கையின் புகழை உலகறியச் செய்தபெருமை திரு. பண்டாரநாயக்காவையே சாரும் அவரை அன்று எதிர்த்தவர்கள்கூட இன்று அவரது பெருமைகளை புகழ்ந்துகூறுகின்றனர்.

அவரது சிரார்த்த தினமான இன்று இந்நாட்டின் ஒற்றுமையையும் இலட்சியத்தையும் பொருளரதாரத்தையும் வளர்ப்பதற்கு சகல பிரஜைகளும் ஒத்துழைக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்,

## உதவி ஒலிபரப்பு அமைச்சர் விடுத்துள்ள செய்தி

கோட்டை. வியாழன்

நாளை நாடுபூராவும்கொண்டாடப்படவிருக்கும் காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவின் சிரார்த்த தின வைபவங்களில் கலந்துகொள்ளுமாறு வேண்டி, உதவித் தகவல் ஒலிபரப்பு அமைச்சர் ஜனப் மஜீத் நாட்டு மக்களுக்கு விடுத்த வானெலிச் செய்தியின் விபரம் வருமாறு:-

தேசிய வளர்ச்சிக்கு வித்திட்டுப் போராடியவர் திரு. எஸ். டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்கா தேசாபிமானமுள்ள தேசியத் தலைவர்வரிசையில் அவர் முன்னணியில் நிற்கிறூர். சேர். பொன் இராமநாதன், சேர். பொன் அருணசலம். சேர். மக்கான் மரைக்கார், சேர். பாரன் ஜயதிலகா. சேர். பீரிஸ் போன்ற முன்னேடித் தேசியத் தலைவர்களின் வரிசையில் முக்கியத்துவம் பெற்றவர்.

பெரும்பான்மை, சிறுபான்மை என்ற இனப்பாகுபாட்டையும்மதப்பாகுபாட்டையும் விடுத்து இலங்கையர் என்றஒருமைப்பாட்டை நிலைநாட்ட முயன்றவர் நமது தேசத்தில் நாம் எல்லோரும் இலங்கையர் என்ற உணர்ச்சியை ஏற்படுத்தியவர். அவர் விட்டுச் சென்ற வழியில் மலர்ந்ததே இந்த அரசாங்கம்

இந்த நாட்டை நேசிக்கும் ஒவ்வொரு பிரஜையும் எந்

(4-ம் பக்கம் பார்க்க)

## மல்லாவி நள்ளிரவு படுகொலை

# மனைவி கைது!

## கோடரி, ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

மட்டுவில், வெள்ளி

மல்லாவியில் நடந்த நள்ளிரவுப் படுகொலையில் கொலையுண்டவரின் மனைவி சந்தேகத்தின்பேரில் நேற்றுக் கைதுசெய்யப்பட்டார். அத்துடன் இக்கொலைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் கோடரியும், இன்னும் சில ஆயுதங்களும் கிணற்றுக்குள்ளிருந்து கண்டெடுக்கப்பட்டுள்ளன,

கடந்த 21-ம் திகதி நள்ளிரவில் ஆழ்ந்த நித்திரையிலிருக்கும்போது நடந்ததாகக் கூறப்படும் மல்லாவியைச் சேர்ந்த 43 வயதான ஆறுமுகம் மதியாபரணத்தின் கொலை சம்பந்தமாக துப்புத்துலக்கிய கிளிநொச்சிப் பொலிஸ் பொறுப்பதிகாரி திரு. கந்தையா, சார்ஜன்ட் திரு. சூசைப்பிள்ளை, திரு. சரவணமுத்து ஆகியோர் கொண்ட பொலிஸ் கோஷ்டி நேற்றைய தினம் சந்தேகத்தின்பேரில் இறந்தவரின் மனைவியான சிதம்பரத்தை (34 வயது) கைது செய்ததுடன், கொலைக்குப் பாவிக்கப்பட்டதாகக் கருதப்படும் பொருட்களையும் மீட்டனர்,

ஏழுகுழந்தைகளுக்குத் தந்தையான ஆறுமுகம் தினமும் குடித்துவிட்டு தனது மனைவியையும் பிள்ளைகளையும் துன்புறுத்தி வந்ததாகவும், இதனல் அவரதுமனைவி மிகவும் மனமுடைந்து இருந்ததாகவும் பொலிசார் நடாத்திய விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேக நபரான கொலையுண்டவரின் மனைவி சிதம்பரம் சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. விக்கினராஜா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு றிமாண்டில் வைக்கப் பட்டுள்ளார்.

# பிரதமர் புதல்வி சுனித்திரா

## வேலையில்லாப் பிரச்னை பற்றி ஆராய்கிறுர்!

லண்டன், செப்.25

இலங்கைப்பிரதமர் திருமதி ஸ்ரீமா பண்டாரநாயகாவின் மூத்த புதல்வியான சுனித்திரா கேம்பிரிஜ் சர்வகலாசாலையிள நடைபெற்ற சர்வதேச மாநாடொன்றில் பங்குபற்றிவிட்டு லண்டன் திரும்பியுள்ளார். லண்டனிலுள்ள வெளிநாட்டு அபிவிருத்தி நிறுவனத்தில் உதவி ஆராய்ச்சியாளராகப் பணிபுரியும் சுனித்திரா தன் நிறுவனத்தின் பிரதிநிதிவாகவே இம்மாநாட்டில் கலந்துகொண்டார்.

10 நாட்கள் நடைபெற்ற இம்மாநாட்டில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளிலுள்ள வேலையில்லாப் பிரச்னை முக்கிய அம்சமாக இடம்பெற்றது. 40 நாடுகளைச் சேர்ந்த 140 சிரேஷ்ட சிவில் அதிகாரிகள் பல ஆராய்ச்சி நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள்கலந்துகொண்டனர். பொருளாதார வளர்ச்சி இருந்தும் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் விஸ்வரூபம் எடுத்துவரும் வேலையில்லாப் பிரச்னைகளை தீர்ப்பதற்கான வழிவகைகளைக் காணவே இம் மாநாடு கூட்டப்பட்டது. இம் மாநாடு முடிவடையமுன் செல்வி சுனித்திரா பண்டாரநாயக்காதம் நிறுவனத்தின் சார்பில் ஓர் அறிக்கையைச் சமர்ப்பிப்பார். உதவி என்றல் என்ன? அதன் கோட்பாடுகள் என்ன? நிர்வாகஸ்தர்களும் உதவிபெறுபவர்களும் அதைப்பற்றி என்ன சொல்லுகின்றனர்? என்பதை அறியும் நோக்கமாக நான்இம் மாநாட்டில் பங்குபற்றினேன், முன்னேறிய நாடுகளினதும் அபிவிருத்தி அடைந்துவரும்நாடுகளினதும் அரசாங்கங்கள் இந்த உதவியை எப்படி நோக்குகின்றன, வேலையில்லாப் பிரச்னைக்கு இந்தஉதவி எவ்வளவுதூரம் உதவுகின்றது என்பதை அறிய இம் மாநாடு உதவியது என்று செல்வி சுனித்திரா கூறினர்.

செல்வி பண்டாரநாயக்கா அரசியல் தத்துவம் பொருளாதாரம் ஆகியவற்றில் சிறப்புப்பட்டம் பெற்றவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

**தேவை**

உதவி மனேஜர் ரூபா 1000/- ஆயிரம் பிணைப் பணம் கட்டக்கூடிய ஒருவர் தேவை சம்பளம் ரூபா 125/- மாதம் கிடைக்கும். நேரில் வரவும் அல்லது விண்ணப்பிக்கவும் ஆர். டி. என். ஸ்ரோஸ் அன் சேல்ஸ் ஏஜன்சி, மேல்மாடி, No 3/1 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 2974


வட்டு

## சிறுபான்மைத் தமிழர் மகாசபை

சங்கானை, வெள்ளி

அகில இலங்கைச் சிறுபான்மைத்தமிழர் மகாசபையின் வட்டுக்கோட்டை தொகுதிக்கிளை அங்குரார்பணம் செய்து வைக்கப்பட்டது. திரு. மா. செல்லையா தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தாய்ச்சங்க நிர்வாகக்காரியதரிசி திரு. எஸ். செல்லையா, தனாதிகாரி திரு. எஸ். இராசையா ஆகியோர் கலந்துஉரையாற்றினர்.

இவர்கள் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: மு. நடேசு, உபதலைவர்: ப. மாணிக்கம், போஷகர்: மா. செல்லையா. காரியதரிசி: இ. நடேசன் உபகாரியதரிசி: க. தவத்துரை தனாதிகாரி: சு. நடேசு 32 பேர் கொண்ட நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

**சனி 26—9—70**

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**344 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கிறிஸ்தவ நற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 கொரகொல்லை நிகழ்ச்சி நேர்முக வர்ணனை, 8-30 வாத்தியஇசை, 8-45 இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அன்ட் 49 மீ.**

9-00 துதிப்பாடல்கள், 9-30 கிறிஸ்தவகீதங்கள், 9-45 வாத்தியஇசை, 10-00 குரல்வகை, 10-30 திருவிளையாடல், 11-10 நிர்த்தன கீதம்.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 பிரதிநிதிகள் சபை — நேர்முகவர்ணனை.

**344 மீ. அன்ட் 61 மீ.**

மாலை 4-25 சங்கமம், 5-00 பிறந்ததினவாழ்த்துக்கள், 5-30 சிறுவர்விருந்து.

இரவு 6-15 முத்திநெறி, 6-30 உங்கள் பிரச்னைகள், 6-45 வீட்டு டாக்டர், 7-00 வாத்தியஇசை, 7-15 சித்திரம், 7-45 இவ்வாரபிரமுகர், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 இசை நிகழ்ச்சி, 10-30 செய்தித் தொகுப்பு.


**வெஸ்லி சினிமா** (மானிப்பாய்) தினசரி 6-30, 10-00

ஜெய்சங்கர் - நிர்மலா வாணிஸ்ரீ - மனோகர் நடித்த

**காதலித்தால் போதுமா?**

**ராணி** (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்

ஜெமினி — பத்மினி — நாகேஷ் ஜெய்சங்கர் வாணிஸ்ரீ நடித்த

**எதிர்காலம்**

கடைசிவாரம்

**வின்ஸர்** (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்

ஜெமினிகணேசன் — ராஜஸ்ரீ ஜெய்சங்கர்-நிர்மலா- நாகேஷ் நடித்த

**பூவா தலையா**

The Film

'PORTRAIT OF GREATNESS'


உதை பந்தாட்டம்:

# கொக்குவில் இந்துவிடம் சென்.பற்றிக்ஸ் தோல்வி!

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரிக்கும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் சென். பற்றிக்ஸ் எதிர்பாராத விதமாக தோல்வியடைந்தது!

மேற்படி இரு கல்லூரிகளுக்குமிடையில் கடந்த பத்து வருடங்களாக உதை பந்தாட்டப் போட்டி நடைபெறுமல் இருந்து வந்தது. இவ்வருடம், இந்த இருகல்லூரிகளுக்குமிடையில் மீண்டும் நடைபெற்ற இப்போட்டியை பார்ப்பதற்கு ரசிகர்கள் பெருமளவில் வந்திருந்தனர்.

இலங்கை உதைபந்தாட்டத்தில் சிறந்து விளங்கும் கொழும்பு விக்ரறிக் கழகத்துடனும் மன்னார் சென். சேவியர், கல்லூரியுடனும் சென். பற்றிக்ஸ் இம்முறை கலந்து கொண்ட உதைபந்தாட்டப் போட்டிகளிலிருந்து, ஒரு பலம் கொண்ட கோஷ்டியை தம்வசம் வைத்திருக்கின்றது, என்ற எண்ணத்தை ரசிகர்கள் மத்தியில் ஏற்படுத்தியிருந்த சென். பற்றிக்ஸ் கல்லூரி இம்முறை யாழ். மாவட்ட கல்லூரிகளுடன் மோதிய முதல் போட்டியிலே தோல்வியடைந்தது, ரசிகர்களின் மத்தியில் அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது.

கொக்குவில் இந்துவுக்கும் சென். பற்றிக்ஸுக்குமிடையில் நடைபெற்ற இந்த ஆட்டம், சற்று ரசனையற்றதாகவே காணப்பட்டது, இரு கோஷ்டிகளும் ஆட்டம் தொடங்கி முடிவடையும் வரை நிலைகுலைந்து விளையாடியவண்ணமே இருந்தன. சென். பற்றிக்ஸ் கோஷ்டி இடைவேளைக்கு முன் மிக வேகமாக முன்னேறிய வண்ணம் இருந்தது. இதனால் இக் கோஷ்டியின் பின்னணி வீரர்களும் முன்னணியில் நின்று விளையாடியதை கண்ணுற்ற கொக்குவில் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் இச்சந்தர்ப்பத்தை பயன்படுத்தி மிக சாதுரியமாக ஒரு கோலைப் போட்டார்கள்.

இடைவேளையின் பின், சென். பற்றிக்ஸ் கோஷ்டியின் முன்னணி வீரர்கள் தம்மால் இயன்றளவு, கோல்களைப் போடுவதற்கு முயன்றபோது கொக்குவில் கோஷ்டியின்கோல்காப்புவீரரும் பின்னணி வீரர்களும் மிக அவதானமாக தடுத்தவண்ணம இருந்தனர். இச்சந்தர்ப்பத்தில், சென். பற்றிக்ஸ் கோஷ்டியினர் 'பெனல்டி' உதை ஒன்றையும் நழுவவிட்டு விட்டனர். ஆட்ட முடிவில், சென். பற்றிக்ஸ் 1—0 கோலால் தோல்வியடைந்தது.

இப் போட்டிக்கு திரு. ஈ. கனகலிங்கம் மத்தியஸ்தராக் கடமையாற்றினர்.

### சென். பற்றிக்ஸ் வெற்றி

இந்த இரு கல்லூரிகளின் 'பி' பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையில் நடைபெற்ற போட்டியில், சென் பற்றிக்ஸ் கல்லூரி 2—0 கோல்களால் வெற்றி பெற்றது.

இந்தப் போட்டிக்கு திரு ஏ. செபஸ்தியாம்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இந்த இரு போட்டிகளும் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன. (தே.நி)

## இன்றைய பலன்

புரட்டாதிமாதம்10-ம்திகதி (26-9-70)

மேஷம்- தொழில் துறையில் புதிய வெற்றிகள் கிடைக்கும் சிலர் வாழ்க்கையில் கடல் கடந்த பிரயாணம் ஒன்று மேற்கொள்ளப்படலாம்.

ரிஷிபம்- இரக்க சிந்தை மேலிடும் சிலர் வேதாந்த விவகாரங்களில் ஈடுபடுவார்கள் கண்ணியமான தினம்.

மிதுனம்- மனதில் விரக்தி நிலை தென்படும். உடல் நலமும் பாதிக்கப்படலாம் கால் நடைகளினால் நஷ்டம் ஏற்படும்.

கடகம்- எதேச்சாதிகாரப் போக்கால் சிலரை பகைத்துக்கொள்ளவும் நேரிடலாம் அமைதி நன்று.

சிம்மம்- இன பந்துக்கள் உங்களை உற்சாகப்படுத்துவார்கள் நீண்டாள் பூமிப் பிணக்கு இன்று நிவர்த்தியாகும். தானிய விருத்திக்கும் இடமுண்டு.

கன்னி- சகோதர வழியால் மனதில் சஞ்சலம் தோன்றக்கூடும். உங்கள் வீட்டிலேயே பூசல் தலைதூக்கும், உஷாராக இருக்க வேண்டும்.

துலாம்- அன்னையின் அன்பு தாராளமாகக் கிடைக்கும். செய்காரியங்களில் தனிப்புகழ் பரவும் முயற்சியால் முன்னேற்றத்துக்கு இடமுண்டு.

விருட்சிகம்- வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக்கொள்ளவும். கடமையாற்றுமிடத்தில் சதிவேலைகள் நடக்கக்கூடும். எதிலும் நிதானம் வேண்டும்.

தனுசு- சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். செய் தொழிலால் நஷ்டம் ஏற்படலாம். சிலருக்கு நூதன ரோகம் தென்படும் சுகா

## 'மனோ வளர்ச்சி மூலமே மனிதன் மனிதனாக வாழமுடியும்'

மட்டுவில், வெள்ளி

நீரும், காற்றும், உணவும் மட்டும் இருந்துவிட்டால் மக்கள் மக்களாக வாழ்ந்துவிட முடியாது. அவர்களுக்கு மனோவளர்ச்சியும் அவசியமாகிறது. மனோ வளர்ச்சியின் மூலமே மனிதன் மனிதனாக வாழமுடிவதுடன் அவனுடைய பூரண உடல் வளர்ச்சியும் பெற வழிபிறக்கமுடியும்.''

இவ்வாறு தென்மராட்சி காரியாதிகாரி பிரிவு விளையாட்டு விழாவில் தலைமை தாங்கி, உரை நிகழ்த்திய மட்டுவில் கிராம சபைத் தலைவர் திரு. வி. [illegible]

மெய்வல்லுநர் போட்டியில் சாவகச்சேரி கணேசா சனசமூகநிலையம் 201 புள்ளிகளையும், மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் 149 புள்ளிகளையும், மீசாலை ஸ்ரீகணேசா விளையாட்டுக்கழகம் 104 புள்ளிகளையும் பெற்றுக்கொண்டன. சுற்றுக் கேடயத்தைச் சாவகச்சேரி கணேசா சனசமூகநிலையம் பெற்றுக் கொண்டது.

## "இலக்கியத்தின் [illegible]"

சினேகபூர்வ

## உதைபந்தாட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், சனி

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான உதை பந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

### சென். ஜோன்ஸ் வெற்றி

யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்கும், அரியாலை விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியில், சென். ஜோன்ஸ் கல்லூரி 2-0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### சென். ஜோசப் வெற்றி

யாழ்ப்பாணம் சென். ஜோசப் விளையாட்டுக் கழகத்திற்கும், யாழ் மத்திய கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற உதபந்தாட்டப் போட்டியில் சென். ஜோசப் கழகம் 4 0 கோல்களால் வெற்றிபெற்றது. இப்போட்டி யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

### மாநகரசபை வெற்றி

யாழ். மாநகர சபை உதைபாந்தாட்டக் கொஷ்டிக்கும், யாழ். பொலிஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யாழ். மாநகர சபைக் கோஷ்டி 5—2 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றது. (தே நி)

## புதிய நிர்வாகிகள்

மாவிட்டபுரம், வெள்ளி

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிலாளர் யூனியன் வருடாந்தக் கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாத் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. ச. கணபதிப்பிள்ளை, உபதலைவர்: திரு. நா. நடராசா, இணைக் காரியதரிசிகள்: திருவாளர்கள்: பெ. வீரசிங்கம், பி. விஜயசேகரா, தனாதிகாரி: திரு. எம். தம்பியையா.

## விக்கிரகங்கள் திருட்டு

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரி, சங்கத்தானை கந்தசுவாமி, வைரவர் [illegible]

# 1-ம் எதிரியின் கையில் துப்பாக்கியைக் கண்டேன்

## கொடிகாமம் 'இராஜு' கொலை வழக்கில் சாட்சியம்

மட்டுவில், வெள்ளி

'கனகரத்தினத்திற்கு சூடு விளலாம் என்ற வதந்தி பலமாக அடிபட்டுக்கொண்டிருந்தது எனவே துப்பாக்கி வேட்டுக் கேட்டதும் கனகரத்தினம் சுடுபட்டிருக்கலாமென்று நான் எண்ணினேனே தவிர அப்பொழுது யார் சுட்டிருப்பார்கள் என்பதை நினைக்கவோ யார் மீதும் சந்தேகம் கொள்ளவோ இல்லை'

கொடிகாமம் இராஜு என்றழைக்கப்படும் ஆறுமுகம் கனகரத்தினம் கொலை வழக்கில் சாட்சியமளித்த வைத்தியநாதன் யோகநாதன் என்ற 28 வயது வாலிபர் தனது 'சாட்சியத்தின்போது, சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே. விக்னராஜா முன்னிலையில் கூறினர்.

இந்த வழக்கில் கொடிகாமத்தைச் சேர்ந்த ராஜு என்றழைக்கப்படும் ஆறுமுகம் கனகரத்தினம் என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொலைசெய்ததாக அதே ஊரைச் சேர்ந்த சாமி என்றழைக்கப்படும் சின்னப்பொடி கந்தையா, கே. வல்லிபுரம், எஸ். சற்குணநாதன் ஆகியோர் மீது சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ்சாட்டி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் வழக்கு விசாரணை ஆரம்பமானது. விசாரணையின்போது எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் என் அருணசலம், வி செல்லத்தம்பி, வி பாலகிருஷ்ணன் ஆகியோரின் அனுசரணையுடன் அட்வக்கேட் திரு. எஸ் நம்பித்துரை, திரு. ஏ. அமிர்தலிங்கம் ஆகியோர் ஆஜராகியிருந்தனர். பொலிஸ் தரப்பில் வழக்கறிஞர் திரு. எஸ். பி மயில்வாகனம் ஆஜராகியிருந்தார். சாட்சி யோகநாதன் தொடர்ந்து தனது சாட்சியத்தில்கூறியதாவது:

'1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் திகதி எனக்கு ஞாபகமிருக்கிறது. அன்று நானும் கனகரத்தினமும் காணி ஒன்றை அளந்துவிட்டு, காணி உறுதி எழுதுவதற்காக, கச்சாய் வீதியிலுள்ள நொத்தாரிசுவீட்டிற்குப் போயிருந்தோம். அப்பொழுது என்னுடன் கனகரத்தினம் உட்பட ஐவர் [illegible]ளில் வீட்டை நோக்கிப் புறப்பட்டார். நாங்கள் கடையில் தொடர்ந்து பேசிக்கொண்டே இருந்தோம்.

இதைத் தொடர்ந்து திடீரென இரண்டு துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது. உடனே என் கையிலிருந்த டோச்லையிட்டை அடித்துக் கொண்டு ஓடினேன் அப்பொழுது மூன்று எதிரிகளும் ஒழுங்கைக்குள்ளால் ஓடிவந்து கண்டி வீதியைக் கடந்து ரயில்ரோட்டுப் பக்கம் ஓடினர்கள்

இந்த மூவரில் முதலாம் எதிரி கையில் துப்பாக்கியிருந்தது. வேறு எவர் கையிலும் எதுவுமிருக்கவில்லை' என்றூர் மேல் விசாரணை அடுத்த மாதம் முதல் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது

## பிரசீடியப் பண்டிகை

திருநெல்வேலி, வெள்ளி

தாளையடி செம்பியன் பற்று ஆகிய இடங்களிலுள்ள மரியாயின்சேனையார் தாளையடி றோ. க. பாடசாலை மண்டபத்தில் பிரசீடியப் பண்டிகையை வெகுசிறப்பாகக் கொண்டாடினர்.

வண. கட்டளைக் குரவர் லெபோன் அடிகளார் மக்கள் சேவையில் மரியாயின் சேனையார் செய்யுந் தொண்டுகள் பற்றி விளக்கினர். ''உதவிச்சேனையார்'' என்ற விடயம் பற்றிச் செல்வி லீலிமலர் மரியாம்பிள்ளை என்பவரும், ''சர்வேசுரனும்மரியாளும்'' என்னும் விடயம் பற்றி செல்வி றெயினுபேதுருப்பிள்ளை என்பவரும் பேசினர் உலகமடங்கலும் பரந்திருக்கும் சேனையார் செய்யும் வெவ்வேறு தொண்டுகள் பற்றி ஆசிரியர் எஸ். அந்தோனிப்பிள்ளை பேசினுர்.

பாட்டுக்கள், நடனங்கள், நாடகங்களும் இடம்பெற்றன. செல்வி மாசில்லாமணி மரியாம்பிள்ளை நன்றியுரை கூறினர்.

## இப்படியும் நடக்கிறதாம்

ஊரதீவு, வெள்ளி

இப்பகுதியில் நிலவும் வரட்சி காரணமாக அதிகாலை இரண்டு மணியளவில் எழுந்து [illegible]

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org


(யாழ்ப்பாணம்) ஜெய்சங்கர்-நிர்மலா- நாகேஷ்
தினசரி 4 காட்சிகள் நடித்த

# பூவா தலையா

The Film
**'PORTRAIT OF GREATNESS'**
in ENGLISH depicting the life Story of the late
Mr, S. W. R. D. BANDARANAIKE
(50 minutes duration) will be shown from
24 th to 30 th AUGUST at WINDSOR daily at
6 P. M. and at REGAL' daily at 4 and 9-30 P.M.

**REGAL** JAFFNA
Daily 4 Shows
LEE MARVIN, BURT LANCASTER,
CLAUDIA CARDINALE in
**THE PROFESSIONALS**
[A ULTS]

கெப்பிட்டல் (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை)
**வெலிங்டன்** யாழ்நகர்
(2-30, 6-30, 9-30)
தாய்க்குலத்தின் பெருமைக்கும்! தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஒவியம் . . .



ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்

# துலாபாரம்

(தமிழ்)
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா, நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

யாற்றுமிடத்தில் சதிவேலைகள் நடக்கக்கூடும். எதிலும் நிதானம் வேண்டும்.

தனுசு- சிந்தையில் தடுமாற்றம் ஏற்படும். செய்தொழிலால் நஷ்டம் ஏற்படலாம். சிலருக்கு நூதன ரோகம் தென்படும் சுகாதாரம் வேண்டும்.

மகரம்- காத்திருந்த கண்களுக்குக் களிப்பூட்டும் விருந்தொன்று கிடைக்கும் மகிழ்ச்சியான தினம்.

கும்பம்- வேண்டிய ஒருவரைப் பகைத்துக்கொள்ள நேரிடலாம் சிலர் வாழ்க்கையில் பிரிவுத்துயர் வாட்டக் கூடும். சகோதர வழியாலும் சஞ்சலமுண்டு,

மீனம்- வாழ்க்கையில் உற்சாகம் ஏற்படும். காதலர்கள் வாழ்வில் கனிவான நிகழ்ச்சிகள் இடம்பெறும்: குதூகலமான தினம்.

சோதிடக் கலாநிதி
**திருமலை க. வேலுப்பிள்ளை**

**ஸ்ரீகாலிங்கன்**
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
என்.ரி. ராமராவ்-ஜெயலலிதா
நடித்த
விடாக் கொடாக் **கண்டன்**

**ராஜா** (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில்4 காட்சிகள்
ஜெய்சங்கர் - கே. ஆர் விஜயா
நாகேஷ்,மாதவி
நடித்த
**முகூர்த்த நாள்**

MANOHARA
Jaffna
Daily: 4-45,7&9-45p.m.
Poya, Prepoya 4 Shows
Rayan O'Neal
in
THE BIG BOUNCE
(Color)

வழிபிறக்கமுடியும்."

இவ்வாறு தென்மராட்சி காரியாதிகாரி பிரிவு விளையாட்டு விழாவில் தலைமைதாங்கி, உரை நிகழ்த்திய மட்டுவில் கிராம சபைத் தலைவர் திரு. வி. சுப்பையா கூறினர்.

சாவகச்சேரி கணேசா சனசமூக நிலையம், மந்துவில் பாரதி விளையாட்டுக்கழகம், மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழகம், நாவற்குழி காந்தி சனசமூகநிலையம், நாவற்குழி சனசமூக நிலையம், மீசாலை ஸ்ரீகணேசா விளையாட்டுக்கழகம், வரணி சிதம்பரப்பிள்ளை விளையாட்டுக்கழகம், சாவகச்சேரி ஜெற் லையினேஸ் விளையாட்டுக்கழகம் ஆகிய எட்டுக் கழகங்கள் பங்குபற்றின.

விளையாட்டுப் பரிசோதகர் திரு. எம் கிருபாகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார். திரு என் ஜீவரத்தினம், திரு. கே. ஸ்ரீதரன் ஆகிய இரு விளையாட்டுப் பரிசோதகர்களும் கலந்துகொண்டு பரிசில்களை வழங்கினர்.

தாச்சிப் போட்டியில் மீசாலை ஸ்ரீகணேசா முதலாமிடத்தையும், கரபந்தாட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக் கழகம் முதலாவது பரிசையும் பெற்றுக்கொண்டது.

## ஓர் ஆசிரியருக்கு 4 பாடசாலைகள்

பருத்தித்துறை, வெள்ளி

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய சித்திர ஆசிரியர் திரு. வீ. மாணிக்கம் மேற்படி வித்தியாலயத்தில் இருநாட்களும், பருத்தித்துறை புட்டளை மகாவித்தியாலயம், கரவெட்டி திரு இருதயக்கல்லூரி, கரணவாய் மகாவித்தியாலயம் ஆகிய இடங்களில் வாரமொன்றுக்கு ஒரு நாளும் சித்திர பாடம் கற்பிக்குமாறு வடமாநிலக் கல்விக் காரியாலயத்தினுல் உத்தர விடப்பட்டுள்ளார்.

சாவகச்சேரி கணேசா சனசமூகநிலையம் பெற்றுக் கொண்டது.

## "இலக்கியத்தின் நோக்கம்"

நெல்லியடி, வெள்ளி

'பண்டைய இலக்கியங்களை நாம் ரசிக்கப் பழக வேண்டும். இலக்கியங்கள் மூலமே நாம் எமது கலை, கலாச்சாரங்களை அறியக் கூடியதாய் இருக்கிறது. இலக்கியத்தின் நோக்கம் ஓர் இலட்சியத்தை அடைவது இராமாயணம், பாரதம்போன்ற காவியங்களில் வரும் கதாநாயகர்கள் ஒரு இலட்சியத்திற்காக வாழ்ந்தார்கள். ஐம்பெரும் காப்பியத்தை எடுத்துப் பார்ப்போமேயானுல் அவர்களும் தமிழர்களின் கலை, கலாச்சாரத்திற்கும் இலட்சியத்திற்குமாகவே வாழ்ந்தார்கள்.'

இவ்வாறு வடதுன்னலை ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தாரின் இலக்கிய வளர்ச்சி மன்றம் கூடியபோது திரு. தா. சண்முகநாதன் தலைமை வகித்துப் பேசுகையில் கூறினர்.

## சதாம்வீதி படு கொலை!

கோட்டை, வெள்ளி

கோட்டை சதாம் வீதி நகைக்கடை உரிமையாளர் கொலை சம்பந்தமாக அவரது நெருங்கிய உறவினர் ஒருவர் பொலிஸாரின் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்டவர் உடல்நேற்று முன்தினம் கடையின் குளியல் அறையில் கண்டுபிடிக்கப்பட்டது பொலிஸ் நாய்கள் மூலம் சந்தேகநபர்களைப் பிடிப்பதில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

## விக்கிரகங்கள் திருட்டு

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரி, சங்கத்தானை கந்தசுவாமி, வைரவர் கோவிலிலிருந்து இரண்டு அம்மன் விக்கிரகங்கள் களவாடப்பட்டுள்ளதாகபொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் நாளுக்குநாள் களவுகள் அதிகரித்து வருவதாகவும், வீடுகளில் புகுந்தும் பொருட்களைக் களவாடிவிடுகிறுர்கள் என்றும் சொல்லப்படுகிறது.

(குவிம)

நாளும் கனகரத்தினமும் காணி ஒன்றை அளந்துவிட்டு, காணி உறுதி எழுதுவதற்காக, கச்சாய் வீதியிலுள்ள நொத்தாரிசுவீட்டிற்குப் போயிருந்தோம். அப்பொழுது என்னுடன் கனகரத்தினம் உட்பட ஐவர் சென்றிருந்தோம். வரும்பொழுது அவர் கனகரத்தினம் சைக்கிளை உருட்டிக்கொண்டு வந்து இரத்தினம் கடையில் வைத்துவிட்டு வந்தார். திரும்பி வந்து இரத்தினம் கடையில் தேநீர் குடித்த பின்னர் எம்முடன் சிறிது நேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு சுமார் பத்து நிமிடங்களுக்குப்பின் சைக்

## நடக்கிறதாம்

ஊரதீவு, வெள்ளி

இப்பகுதியில் நிலவும் வரட்சி காரணமாக அதிகாலை இரண்டு மணியளவில் எழுந்து தொலை தூரம் தண்ணீர் அள்ளச் செல்லும் பெண்கள் பயமுறுத்தப்படுகிறுர்களாம் இப்பகுதி மக்கள் இதனுல்மிகுந்த கவலையடைந்துள்ளனர் அரசாங்கசிற்றூழியர் ஒருவரும் இதில் ஈடுபட்டுள்ளதாக அவரது மேலிடத்துக்குப் புகார் செய்யப்பட்டுள்ளது.




அறவே களைகளை அழிக்குமென நிரூபிக்கப்பட்ட சேர்கோப்பூர் 36%, 3.4 டீ.பீ.ஏ. கொண்டது. 35% முதல் 75% வரை அது விளைச்சலைப் பெருக்கும். நெல் விதைத்து 7-21 நாட்களுள் அதைப் பாவிக்க வேண்டும்.

இக் களைகொல்லியைத் தெளிப்பது மிகச் சுலபம்; மிகச் சிக்கனம்.
சேர்கோப்பூர், பேயர் விவசாய இரசாயனப் பொருள். பேயர் பொருள்கள். ஜெர்மனியில் 100 வருட தொழில் நுட்ப ஆராய்ச்சியின் ஆதாரம் கொண்டவை.

சிக்கனமாக, சிறப்பாகப் பயிர்களைக் காப்பது - சேர்கோப்பூர். அது, களவு செய்ய முடியாத போத்தலிற் கிடைக்கும்.

பசளையைக் களை தின்று விளைச்சலைக் குறைக்கிறதா?




# சேர்கோப்பூர் 36%
களைகளைக் கொல்கிறது
BAYER ®

மூலப் பொருட் சத்து உற்பத்தியாளர்:
பேயர்
மேற்கு ஜெர்மனி

இலங்கையில் தயாரிப்போர்:
ஹேக்கெம் லிமிட்டெட்
400, டீன்ஸ் வீதி, கொழும்பு-10.
P. 9152 R

பிடவை வியாபாரிகளுக்கோர்
# விசேஷ அறிவித்தல்!
தீபாவளித் திருநாளை முன்னிட்டு ஏராளமான ஜவுளிகளை வரவழைத்திருக்கிறேம். விசேஷமான கழிவு கொடுக்கப்படும்
உங்கள் விற்பனைக்குத் தேவையான ஜவுளிகளை பெற்றுக்கொள்ள வருமாறு அன்புடன் அழைக்கின்றேம்.
# செ. காசிப்பிள்ளை அன் கோ.,
82, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்:
போன்: 506

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜோர்டான் புதிய பிரதம மந்திரி

# திடீர் ராஜினாமா

# ஹோட்டலில்கடிதம்வைத்துவிட்டு மாயமாய் மறைந்துவிட்டாராம்

## அரபு சமரசக் குழுவை சந்திக்க

## கொமாண்டோ தலைவர் இணக்கம்

அம்மான், செப். 25

**ஜோர்டான் இராணுவ அரசின் பிரதமர் பிரிகேடியர் முகமத் தாவுத்தின் ராஜினாமாவை ஜோர்டான் மன்னர் ஹுசேன் ஏற்றுக் கொண்டார்.**

**இரண்டாவது தடவையாகவும் சூடான் அதிபர் நுமேரியின் தலைமையில் அம்மானுக்கு வந்துள்ள அரபுக் குழுவைச் சந்திக்க, கொமாண்டோத் தலைவர் அரபாத் ஒப்புக்கொண்டார்.**

**யுத்த நிறுத்தம் செய்யப்பட்ட ஜோர்டான்-இஸ்ரேல் எல்லைப்பிரதேசத்தில் கொமாண்டோக்கள் ஊடுருவல் செய்ய அனுமதித்தால் அதனால் ஏற்படும் விளைவுகளுக்கு அந்த நாட்டு அரசே பொறுப்பேற்கவேண்டுமென இஸ்ரேல் உதவிப் பிரதமர் திரு. அலோன் எச்சரித்துள்ளார்.**

ஜோர்டான் மன்னர் ஹுசேனால், ஒரு வாரத்திற்கு முன் இராணுவ அரசின் பிரதமராக நியமிக்கப்பட்ட பிரிகேடியர் முகமத் தாவுத் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். அரபு நாடுகளின் கூட்டங்களில் கலந்துகொள்ளக் கெய்ரோவுக்குச் சென்ற பிரதமர் தாவுத், அங்கு நடைபெற்ற எவ்வித கூட்டங்களிலும் கலந்துகொள்ளவில்லை. அவர் தங்கியிருந்த ஹோட்டலிருந்து மாயமாக மறைந்துவிட்டார், தனது ராஜினாமாக் கடிதத்தை, இவர் தான் தங்கியிருந்த விடுதியிலேயே விட்டுச்சென்றுள்ளார். தனது ராஜினாமாவால், ஜோர்டானில் மக்கள் ஆட்சி ஏற்பட வழி பிறக்குமென அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாக கெய்ரோச் செய்திகள் கூறுகின்றன.

இந்த ராஜினாமாவை ஏற்றுக்கொண்ட மன்னர் ஹுசேன், புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தும்வரை நாட்டின் அரசியல் பொறுப்புகளையும், கடமைகளையும் தொடர்ந்து செய்துவரு...

### யு. எஸ். ஏற்பாடு

ஜோர்டானில் இருக்கும் குழப்ப நிலையை மனத்திற்கொண்டு மத்திய தரைக் கடலில் உள்ள அமெரிக்காவின் 6-வது கடற்படையுடன் அமெரிக்காவின் விமானப்படைப் பிரிவொன்று சேர்ந்துகொண்டுள்ளதாக நியுயோர்க்கிலிருந்து கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

### இஸ்ரேல் மந்திரிகள் கருத்து

ஜோர்டானில் ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து இஸ்ரேல் நாட்டின் இரு அமைச்சர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

யுத்த நிறுத்தம் செய்யப்பட்டுள்ள ஜோர்டான் இஸ்ரேல் எல்லைப் பகுதியில் அரபு விடுதலை முன்னணியினர் ஊடுருவல் செய்து இஸ்ரேலைத் தாக்குவதற்கு அனுமதித்தால் அதனால் பெருத்த விளைவுகள் ஏற்படுமென இஸ்ரேல் உதவிப் பிரதமர் ஜெனரல் அலோன் ஜோர்டான் மன்னரை எச்சரித்துள்ளார். ஜோர்டானில் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலை...

### நாட்டைக் காக்கும் நிதிக்கு

## ரூபா 14,770 வழங்க தீர்மானம்

கோட்டை, வெள்ளி

நாட்டைக்காக்கும் நிதிக்கு இலங்கைப் பெற்றோலியம் கூட்டுத்தாபனம் தனது ஊழியர்களிடமிருந்து சேகரித்து 14,770 ரூபா வழங்கியுள்ளது.

இந்தப் பணத்தைக் கூட்டுத்தாபனம், கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. ரி. பி. சுபசிங்காவிடம் வழங்கியது.

### ரஷ்யசாதனைக்கு பிரிட்டிஷ் விஞ்ஞானி பாராட்டு

லண்டன், செப். 25

சோவியத் யூனியன் சந்திரனுக்கு அனுப்பிய ஆளில்லாக்கலமான 'லூனா 16' தொலைக் கட்டுப்பாட்டின் மூலம் சந்திரனின் கல், மண் மாதிரிகளுடன் வெற்றியுடன் பூமி திரும்பியதை யிட்டு, லண்டன் விண்வெளி ஆராய்ச்சி நிலையத் தலைவர் திரு. பெர்னட், சோவியத் விஞ்ஞானிகளைப் பாராட்டியுள்ளார்.

அவர் மேலும் சந்திரனில் மனிதனை உலாவ விட்டு ஆராய்ச்சி செய்வது மிகுந்த பலனைத்தரும் எதிர் காலத்தில் விண்வெளியில் செய்யப்படும் ஆராய்ச்சிக்கு அமெரிக்காவுடன் சோவியத் ரஷ்யாவின் விண்வெளி விஞ்ஞானிகள் ஒத்துழைப்பார்கள் என நம்பிக்கை தெரிவித்தார்.

......

### உற்பத்தி அதிகரிப்பு

யாழ்ப்பாணம், சனி

வலி மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச்சங்க சமாசத்தின் மின்தறி ஆலையில் இப்போது உற்பத்தி அதிகரித்துள்ளது அத்துடன் இங்கு உற்பத்தியாகும் துணியின் தரமும் உயர்ந்திருப்பதாக பாவனையாளர்கள் தெரிவிக்கின்றனர். மின்தறி ஆலை தொழிலாளர்களின் ஒத்துழைப்பும், ஆர்வமுமே இந்த முன்னேற்றத்திற்குக் காரணமென மின்தறி ஆலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பெங்களூர்.

## பல்கலைக்கழகத்துக்கு மாணவர் தீ வைப்பு

பெங்களூர், செப். 25

பெங்களூர் பல்கலைக் கழக மாணவர்கள் இன்று பல்கலைக் கழக செனட்மண்டபத்துக்கு தீவைத்ததினால் கட்டிடத்தின் பெரும்பகுதி பலத்த சேதத்துக்குள்ளாகியது,

தீயணைக்கும் படையினர் நெருப்பை அணைக்கவிடாது மாணவர்கூட்டம் தடுத்ததாகவும் இதனால் கட்டிடத்தின் முதலாவதுமாடி எரிந்து பலத்த சேதத்துக்குள்ளாகியதாகவும் கூறப்பட்டது.

மாணவர் கும்பலைக் கலைப்பதில் பொலிசாருக்குபெரும் திண்டாட்டமாக இருந்தது. ஒரு சந்தர்ப்பத்தில் பொலிசார் கண்ணீர்ப்புகையும் குண்டாந்தடியடியும் பிரயோகித்தனர். தீயணைக்கும் படையினர் ஸ்தலத்துக்கு விரைந்துவந்தபோது அவர்களது கடமையைச் செய்ய விடாதுமாணவர்கள் தடுத்து நிறுத்தினர்.

மாணவர்களின் இச்செயல்கள் பற்றி மைசூர் ராஜ்ய சட்ட சபையில் இன்று பிரச்னை கிளம்பியபோது, சட்ட சபையில் அமளிதுமளி ஏற்பட்டது. 30நிமிடநேரம் வரைநீடித்த குழப்பத்தின் பின்னர் சபை ஒத்திபோடப்பட்டது.

விமானத்தை திசை திருப்பிய

## அமெரிக்கரை கியூபா திருப்பிக்கொடுக்கும்

ஹவானா. செப். 25

கியூபா முதல்தடவையாக விமானத்திசைத் திருப்புவதில் ஈடுபட்ட ஒருவரை அவரது விருப்பத்துக்கு மாறாகவே அமெரிக்காவுக்குத் திருப்பிக்கொடுக்க முன்வந்துள்ளது கடந்த ஆகஸ்ட் மாதம் கியூபாவுக்கு அமெரிக்கவிமானம் ஒன்றை பலவந்தமாக திசைதிருப்பிக் கொண்டுபோனராணுவ அதிகாரி ஒருவரையே இப்பொழுது கியூபா திருப்பிக் கொடுக்கின்றது விமானங்களைத்திசை திருப்பி வந்து நியாயமான அரசியல் காரணங்களுக்காக புகலிடம் கோருகிறவர்களுக்கு மாத்திரமே புகலிடம் அளிப்பதென சமீபத்தில் கியூபாவில் புதிதாகச் சட்டம் இயற்றப்பட்டது.

குற்றங்களைத் தடுக்க

## மூளையில் அறுவைச் சிகிச்சை

லண்டன், செப். 25

குற்றம் செய்வதையே தொழிலாகக் கொண்ட மனிதர்களைச் சீர்திருத்த மூளை அறுவைச் சிகிச்சை உதவும்என நரம்பு அறுவைச் சிகிச்சை வல்லுனர் ஒருவர் கூறுகிறார். தனது கூற்றை நிரூபிக்க அவர் மூன்று நபர்கள் பற்றிய சுவையான தகவல்களைத் தருகிறார்.

முதல் நபர் ஒரு திருடன். காக்காய் வலிப்பு அவனுக்கு வருவதுண்டு பல தடவைகள். குற்றங்களுக்காக சிறைத்தண்டனை அனுபவித்தவன். அவனுக்கு ஒரு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, மூளையின் ஒரு பகுதி அகற்றப்பட்டது' கடந்த பதினேழு வருடங்களாக...

அரபுத்தலைவர்களின்

## சமரச முயற்சி வெற்றியளிக்குமா?

அம்மான், செப். 25

ஜோர்டானில் ஏற்பட்டுள்ள நிலைமை இன்னும்மோசமாகாமல் தடுக்க அரபுத் தலைவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் எதிர்பார்க்கும் அளவு பயனளிக்கும் என்பது குறித்து இங்குள்ள சர்வதேச அவதானிகள் எவரும் திடமான கருத்து வெளியிட மறுக்கிறார்கள்

கொரில்லாக்களுக்கும், ஜோர்டான் அரசுக்குமிடையில் போர் நிறுத்தத்துக்காக கடந்த சில மாதங்களுக்கிடையில் ஒப்பந்தங்களுக்கு மேல் ஒப்பந்தங்கள் ஏற்பட்டபோதிலும் அந்த ஒப்பந்தங்களின் மை காயுமுன்னரே அவை மீறப்பட்டு வந்துள்ள சம்பவங்களை அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

அரபுத் தலைவர்களின் உயர் குழுவினரைச் சந்திப்பதற்கு கொமாண்டோத் தலைவர் அரபாத் ஒப்புக்கொண்டிருப்பதும், ஜோர்தான் ராணுவ ஆட்சியின் பிரதமர் பிரிகேடியர் தாவூத் ராஜினாமா செய்திருப்பதும் ஜோர்டான் நிலைமையில் கடைசியாக ஏற்பட்டுள்ள திருப்பங்களாகும். இந்தத் திருப்பங்களின் காரணமாக ஜோர்டானில் அமைதி ஏற்பட்டு அரபுக்கள் தம் பொது எதிரிக்கு எதிராக யுத்தசன்னதம் கொள்வதற்கு வழியேற்படுமானால் அரபு உலகம் பெரிதும் பயனடைவதாக இருக்கும். ஆனால் ஜோர்டானில் ஏற்பட்ட நிலைமை அந்த நாட்டில் மட்டும் சிக்கலை ஏற்படுத்தவில்லை வெளியிலுள்ள அரபு நாடுகளும் இந்த யுத்தத்தில் நேரடியாகவும் மறைமுகமாகவும் பங்கெடுத்துக் கொண்டுள்ளன.

எனவே யுத்தம் இத்துடன் நிற்காமல் தொடருமானால் மறைமுகமாக தலையிட்ட அரபுநாடுகள் நேரடியாகவே கலந்துகொள்ளக்கூடும் என்பது போக, வல்லரசுநாடுகளின் தலையீட்டுக்கும் இது வழிகோலும். ஏற்கனவே அமெரிக்க படைகள் உஷார்படுத்தப்பட்டுள்ளதுடன், மத்தியதரைக் கடல்பிரதேசத்தில் அமெரிக்க ஆறுவது கடற்படை முகாமிட்டு உத்தரவுக்காகக் காத்திருக்கின்றன. சிரியாவைத் தொடர்ந்து பாலஸ்தீனக் கொமாண்டோக்களுக்கு உதவும்படி சீனா போன்ற நாடுகள் வலியுறுத்தியுள்ளன.

அம்மானிலும், அதை அடுத்துள்ள நகரங்களிலும் காயங்களுக் குள்ளானவர்களுக்கு நிர்க்கதிக்குள்ளானவர்களுக்கும்உதவியளிப்பதே பெரும் பிரச்னையாக மாறியிருக்கின்றது. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தன்னலான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தபோதிலும் நிலைமை இன்னும் சீராகவில்லை யென்று கூறப்படுகின்றது.

## சலவைத் தொழிலாளர் யாழ். மேயரை சந்தித்தனர்

யாழ்ப்பாணம், சனி

ஒட்டுமடத்தில் உடனடியாக ஒரு கிணறு வெட்டி, தொட்டிகட்டித் தருவதாக யாழ் மேயர் திரு ரி.எஸ். துரைராஜா, அவரை சந்தித்துப் பேசிய யாழ் சலவைத் தொழிலாளர் சங்கத் தூதுகோஷ்டியிடம் தெரிவித்தார்.

உதவி மேயர் திரு ஏ. துரைராஜசிங்கம், திரு என் ரி. செல்லத்துரை ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

சலவைத் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக, மழை காலத்தில் ஏற்படும் கஷ்டங்களை தூதுகோஷ்டி மேயரிடம் விளக்கிக் கூறியது. கஷ்டங்களை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுப்பதாக மேயர் உறுதியளித்தார்.

கஸ்தூரியார் வீதிக்கு அருகில் உள்ள குளத்தில், சுமார் 50 சலவைத் தொழிலாளர் குடும்பங்கள் பரம்பரையாக தொழில் செய்து வருவதாகவும், இக் குளத்திற்கு பாதை அமைத்துத் தரும்படியும், தூதுகோஷ்டி கேட்டுக் கொண்டது. இது பற்றியும் மேயர் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

'புதிய அரசியல் அமைப்புப் பற்றி

## குழுக்கள் மூலம் நேரடியாக மக்கள் கருத்தை அறியவேண்டும்'

கொழும்பு, வெள்ளி

''புதிய அரசியலமைப்புச் சம்பந்தமாக எழுத்து மூலம் பொது மக்களிடமிருந்து கிடைக்கும் மகஜர்களைப் பரிசீலனை செய்யும் அதே... கொழும்பு புரக்டர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் மேற்கண்ட யோசனையைத் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கை யொன்றில் மேலும் தெரி... அரசியலமைப்புச் சம்பந்தமான அபிப்பிராயங்களை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். புதிய அரசியலமைப்பில் பொதுமக்களும் பங்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தனி இனக்கோரிக்கைக்கு

க்கொண்ட மன்னர் ஹுசேன், புதிய அரசாங்கத்தை ஏற்படுத்தும்வரை நாட்டின் அரசியல் பொறுப்புகளையும், கடமைகளையும் தொடர்ந்து செய்துவருமாறு புதிய இராணுவ அரசைக் கேட்டுள்ளாரென அம்மான் வானொலி இன்று அறிவித்தது.

### றேடியோ மூலம் தொடர்பு

சூடான் நாட்டின் அதிபர் நுமேரியின் தலைமையில் கெய்ரோவிலிருந்து அம்மான் சென்றுள்ள அரபு நாடுகளின் இரண்டாவது உயர்குழு. பாலஸ்தீன அரபுக் கொமாண்டோக்களின் தலைவர் திரு. அரபாத்தை எவ்விடத்தில் சந்திக்கலாமெனத் தமக்கு அறிவிக்குமாறு வானொலி மூலம் வேண்டுகோள் விடுத்திருந்தது. அம்மானுக்கு வெளியே உள்ள கொமாண்டோக்களின் இரகசியத் தலைமை நிலையத்தில் சந்திக்குமாறு டமாஸ்கஸ் வானொலி மூலம் அரபாத், அரபுக் குழுவுக்குச் சம்மதம் தெரிவித்துள்ளார்.

ஐ. நா. பொதுக்காரியதரிசி யு தாண்டும், மகாசபைத் தலைவர் திரு. கம்ப்ரேவும் ஜோர்டானில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை அளிக்குமாறு ஏனைய நாடுகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர்.

### செஞ். சங்கம் மறுப்பு

பிரிட்டிஷ் பிரதமர் திரு. ஹீத், ஜோர்டானில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அளிக்க முன்வந்த உணவு, மருந்துப் பொருட்களை ஏற்றுக்கொள்ளச் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் மறுத்துவிட்டது. இதனால் பிரிட்டன் தாமே ஜோர்டானுக்கு அப்பொருட்களைக் கொண்டு செல்வதற்கு முடிவுசெய்துள்ளது.

அம்மானிலும், இர்பிட் பிரதேசத்திலும் கடும் சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஜோர்டானியப் படைகள், விமானங்கள், தாங்கிகள், கனரக பீரங்கிகளைக் கொண்டு கொமாண்டோ நிலைகளைக் கடுமையாகத் தாக்குவதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

இதற்கிடையில் அம்மானில் காயமுற்றோருக்கு உதவிசெய்ய. 24 மணிநேரப் போர் ஒய்வுசெய்யுமாறு ஜெனிவாவில் உள்ள சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் இரு தரப்பினரையும் கேட்டுள்ளது.

பெருத்த விளைவுகள் ஏற்படுமென இஸ்ரேல் உதவிப் பிரதமர் ஜெனரல் அலோன் ஜோர்டான் மன்னரை எச்சரித்துள்ளார். ஜோர்டானில் ஏற்பட்டிருக்கும் குழப்பநிலை தவிர்ந்து, மன்னர் ஹுசேனின் ஆட்சி வெற்றிபெற வேண்டுமென இஸ்ரேல் பாதுகாப்பமைச்சர் ஜெனரல் தயான் இன்று ரெல் அவிவில் தெரிவித்தார்.

விமானத் திசைதிருப்பலில் ஈடுபட்டு, பிரிட்டனில் கைதியாகவிருக்கும் பாலஸ்தீனக் கொமாண்டோவைச் சேர்ந்த லைலா காலித்தை விடுதலை செய்ய முடியாதென பிரிட்டிஷ் பிரதமர் திரு. எட்வேர்ட் ஹீத் தொலைக்காட்சிப் போட்டியில் தெரிவித்தார். கொமாண்டோக்களினால் இன்னமும் காவலில் வைக்கப்பட்டிருக்கும் திசை திருப்பப்பட்ட விமானப் பிரயாணிகள் எல்லோரையும் விடுதலை செய்யும் வரை லைலா காலித்தை விடுதலை செய்ய முடியாதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வல்லிபுர ஆழ்வார் உற்சவம்

பருத்தித்துறை, வெள்ளி

வல்லிபுர ஆழ்வார் இம்மாதம் 29-ந் திகதி ஆரம்பமாகிறது அடுத்த மாதம் 17-ந் திகதி வரை உற்சவம் நடைபெறும்.

## தீமூட்டித் தற்கொலை

மாவிட்டபுரம், வெள்ளி

மனநோயால் பீடிக்கப்பட்ட இளம் பெண்ணொருவர் தம்மை வைக்கோலால் தீமூட்டி உயிரை மாய்த்துக் கொண்ட பரிதாபசம்பவம் பெரிய விளானில் நடைபெற்றுள்ளது.

சங்கானைப்பொலிஸ் பகுதியைச்சேர்ந்த பெரியவிளான் கிராமத்தில் வசிக்கும் கே. பூமணி என்ற 31 வயதுநிரம்பிய பெண்ணே இப்படி மரணமானவர்.

இவரின் மரணம் குறித்து விசாரணை நடத்திய திடீர் மாணவிசாரணை அதிகாரி திரு. எஸ் சேனாதிராஜா விசாரணைநடத்தினார். பிரஸ்தாப பெண் மனநோயால் பீடிக்கப் பட்டிருந்ததாகவும் சம்பவதினம் வீட்டில் ஒருவரும் இல்லாத சமயம்இவர் வைக் கோலைத் தம் மீது போட்டுத் தீமூட்டிக்கொண்டதாகவும் விசாரணையில் தெரிவிககப்பட்டது.

தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

கொழும்பு, வெள்ளி

''புதிய அரசியலமைப்புச் சம்பந்தமாக எழுத்து மூலம் பொது மக்களிடமிருந்து கிடைக்கும் மகஜர்களைப் பரிசிலனை செய்யும் அதே வேளையில் நேரடியாக மக்களின் அபிப்பிராயங்களையும் அரசியல் நிர்ணயசபை அறிந்து கொள்ளவேண்டும்.''

கொழும்பு புறக்டர் திரு. எஸ். சிவசுப்பிரமணியம் மேற்கண்ட யோசனையைத் தெரிவித்துள்ளார். அவர் விடுத்துள்ள அறிக்கையொன்றில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

'அரசியல் நிர்ணயசபை உபகுழுக்களை நியமித்து நாட்டின் பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து புதிய அரசியலமைப்புச் சம்பந்தமான அபிப்பிராயங்களை பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொள்ளவேண்டும். புதிய அரசியலமைப்பில் பொதுமக்களும் பங்கு கொண்டு உழைக்கவேண்டுமென்பது இதன் மூலம் பூரணமாகப் பூர்த்தியாகும்.

பிரிட்டிஷ் அரசாங்கம் இங்கு அரசியலமைப்பு மாற்றங்களைச் செய்வதற்கு கமிஷன்களை நியமித்து பல பகுதிகளுக்கும் விஜயம் செய்து பொதுமக்களிடமிருந்து வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்டது டொனமூர் கமிஷனும், சோல்பரிக்கமிஷனும யாழ்ப்பாணத்துக்கும் மற்றும் பகுதிகளுக்கும் சென்றது நினைவுக்கு வருகிறது.

அந்நிய அரசாங்கத்துக்கும், அந்நியர்களுக்கும் இப்படி பல பகுதிகளுக்கும் சென்று வாக்குமூலங்களை எடுக்க முடிந்ததென்றால் ஏன் நமது அரசாங்கத்தாலும், நமது அரசியல்வாதிகளாலும் முடியாது?

வெளியூரிலுள்ளவர்கள் கொழும்புக்குச் சென்று வாக்குமூலமளிப்பது சுலபமான காரியமல்ல. இதற்காக நியமிக்கப்படும் உபகுழுக்கள் பல்வேறு மாவட்டங்களுக்கும் சென்று வாக்குமூலங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

பிரதமரும் அரசியல் நிர்ணயசபையும் இதுசம்பந்தமாக ஆவன செய்யவேண்டும்.

## ஆசிரியர்கள் மத்தியில் ரயில்வே வாரண்ட் மோசடி

### வடபகுதியில் அம்பலம்

யாழ்ப்பாணம், சனி

வடமாகாணத்தில் பல பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் சேர்ந்து ரயில் வே வராண்ட்' டில் செய்ததாகக் கூறப்படும் மோசடி வடமாநிலக் கல்வி அதிகாரிகள் கோஷ்டியொன்று நடாத்திய சோதனையில் அம்பலத்துக்கு வந்துள்ளதாம்.

ஒரு நிதியாண்டுக்கு அனுமதிக்கப்பட்ட மூன்றுசோடி ரயில்வே 'வாரண்' டைவிட மேலதிகமான வாரண்டுகளை தமது குடும்பத்தாருக்கு பல தலைமை ஆசிரியர்கள் எடுத்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளதாம்

இப்படியான மோடி நடக்கிறதென்ற சந்தேகத்தில் வட மாநிலக் கல்வி அதிபதியின் உத்தரவைத் தொடர்ந்து, வட மாநிலக் கணக்காளரும், அவரது உதவி அலுவலகர்களும் காங்கேசன் துறை வட்டாரம், நல்லூர் வட்டாரம், வவனியா வட்டாரம் ஆகிய இடங்களில் நடத்திய மாதிரிச் சோதனையில் பல விஷயங்கள் அம்பலத்திற்கு வந்துள்ளனவாம்.

இதனைத் தொடர்ந்து பல ஆசிரியர்களிடம் பிரயாணப் பணம் அறவிடப்பட்டது.

காங்கேசன்துறையில் ஒரு தலைமை ஆசிரியர் தற்காலிகமாக வேலையிலிருந்து நிறுத்தப்பட்டுள்ளார் அவரது சம்பளமும் நிறுத்தப்பட்டுள்ளது.

வவனியாவில் ஒரு கல்லூரி அதிபர் தனக்கு மட்டும் பதினொரு 'வாரண்டுகள்' பெற்ற சுவையான சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது

இந்தவிதமான மோசடி 'வேட்டை' ஆசிரியர்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிகிறது.

## 'மாவட்ட ரீதியில் நிர்வாகம் பரவலாக வேண்டும்'

யாழ்ப்பாணம், சனி

''மாவட்டரீதியில் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் சபைகள் அமைக்கப்படுவதன் மூலம் நிர்வாகம் பரவலாக்கப்படவேண்டும்''

யாழ்ப்பாணம் மக்கள் மன்றம் அரசியல் நிர்ணயசபைக்கு அனுப்பியுள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

அம் மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

''எமது நாட்டின் வரலாற்றில்அரசியல்சட்ட அமைப்பு ஒரு அரிய நிகழ்ச்சியாகையால், அதிலும் எமது நாட்டின் அந்தஸ்தை தனித்துவம் பெற்ற குடியரசாகப் பிரகடனப் படுத்தி உயர்த்தும் இவ்வேளையில் மக்களுடைய அபிலாஷைகளுக்கும் முயற்சிக்கும் மறைமுகமான தகைமைகளுக்கும் எல்லா வாய்ப்பு வசதிகளும் அளிக்கப்படுவதன் மூலம் 1946-ம் ஆண்டு தொடக்கம் இன்று வரை எமது வாழ்வை இருள்போல் சூழ்ந்திருந்து அடிப்படை உரிமைகள் உதாசீனம் செய்யப்பட்டு உயிருக்கும் உடைமைக்கும் இருந்து வந்த பயமுறுத்தல்கள் முற்றாக ஒழிக்கப்படுமெனவும் கருதுகிறோம்''

சமீபத்தில் மக்கள் மன்றம் கூடி நிறைவேற்றிய தீர்மானங்களில் சில:-

0 இந் நாட்டிற்கு ஒரு புதிய அரசியல் திட்டத்தை நிர்ணயிக்கு முன்பு இங்கு வாழும் பல்வேறு இனமக்களின் அடிப்படை உரிமைகள் நிர்ணயிக்கப்படவேண்டும்.

0 நாடற்றவர் ஒருசாரார் இந்நாட்டில் இருக்கக்கூடாது

## 'ஆடம்பரம் வேண்டாம்'

உடுவில், வியா.

''ஆடம்பரமான வைபவங்களை நடத்துவதன் மூலம் நாம் ஆண்டவன் அருளை பெற்றுவிட முடியாது. அன்போடும் பக்தியோடும் நாம் செய்யும் கருமங்கள் தான் நமக்கு அருளைதர வல்லது. நமது பாடசாலையில் வளர்ந்துள்ள இவ்வாலயம் எதுவித ஆடம்பரமும் இன்றி ஆரம்பிக்கப்பட்டது. இது மேலும் வளர்ச்சியடைய வேண்டும் என்றால் மாணவர்கள் ஆடம்பர நிகழ்ச்சிகளை கைவிட்டு பக்தி விசுவாசத்தை கைக்கொள்ள வேண்டும்'

மானிப்பாய் மெமோரியல் மகாவித்தியாலய சைவ மாணவர் மன்றக் கூட்டத்தில் பேசிய ஆசிரியர் பண்டிதர் மு. கதிரவேலுப் பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்.

மாணவ மன்ற தலைவர் செல்வன் சந்திரராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

கள், குற்றங்களுக்காக சிறைத்தண்டனை அனுபவித்தவன். அவனுக்கு ஒரு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, மூளையின் ஒரு பகுதி அகற்றப்பட்டது' கடந்த பதினேழு வருடங்களாக அவன், ஒரு குற்றமுமே புரியவில்லையாம்.

இரண்டாம் நபர் ஒரு மோட்டார் விபத்தில் சிக்கி, பலத்த காயமடைந்தவர். குணமாகி வீடடைந்ததும், தன் மனைவியையும், மாமியாரையும் கொலைசெய்ய முற்பட்டு, சிறை செய்யப்பட்டவர். இவருக்கும் மூளையில் அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டு, ஒரு சிழ்க்கட்டு அகற்றப்பட்டது. இப்பொழுது தன் குடும்பத்துடன் சுகமே வாழ்ந்து வருகிறார்.

போலிக் கையெழுத்திட்டு மோசடி வேலைகளில் ஈடுபட்டவர் மூன்றாவது நபர். இவருக்கு நடந்த மூளை அறுவைச் சிகிச்சையின் பின், இவர் தன் மோசடித்தொழிலையே மறந்துவிட்டார். அது மட்டுமல்ல. இப்பொழுது, ஒரு வங்கியின், கணக்காளராகப் பணிபுரிந்து வருகிறார்.

மூளையில் ஏற்படும் கவலைகள், கட்டுகள், மனிதனைச் செய்யத் தகாதவற்றைச் செய்யத் தூண்டுகின்றன வென்றும், இவற்றை அறுவைச் சிகிச்சை மூலம் அகற்றிவிட்டால் அவன், தன் போலித்தன்மை இழந்து சமுதாயத்திற்குப் பயன்படும் மனிதனாக மாறிவிடுகிறான் என்றும் இந்த நரம்பு அறுவைச் சிகிச்சை நிபுணர் கூறுகிறார்.

## இடமாற்றத்தை எதிர்த்து நடவடிக்கை

திருக்கோணமலை, வெள்ளி

திருக்கோணமலை இ. போ. ச. டிப்போவில் கடமையாற்றும் 17 ஊழியர்களுக்கு இம்மாதம் 20-ம் திகதியிலிருந்து திடீர் இடமாற்ற உத்தரவு கிடைத்துள்ளது. இதில் இலங்கை பஸ் தொழிலாளர் கழகத்தைச் சேர்ந்த 12 தமிழ் ஊழியர்களும் 5 சிங்கள ஊழியர்களும் உள்ளனர்.

மேற்படி இடமாற்றத்தை 12 தமிழ் ஊழியரும் ஏற்க மறுத்துவிட்டனர். இதுவிஷயமாக திருமலை எம். பி. யும் இலங்கை பஸ் தொழிலாளர் கழக செயலாளரும் தீவிர நடவடித்கை எடுத்து வருகின்றனர். (நல். நி.)

ரும் சமுகமளித்திருந்தனர்.

சலவைத் தொழிலாளர்களுக்கு, குறிப்பாக, மழை காலத்தில் ஏற்படும் கஷ்டங்களைக் கொண்டது. இது பற்றியும் மேயர் நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

## "தனி இனக்கோரிக்கைக்கு பெரும்பான்மை தமிழரே பொறுப்பாளிகள்"

உடுவில், வெள்ளி

''தமிழினத்திற்குள்ளே ஒடுக்கப்பட்டு அடிமைகளாக வாழ்ந்த ஒருசில தமிழ் இன மக்களை கொடுமைப்படுத்தியவர்கள் பிற இனத்தவர்களல்ல. நமது இனமே நம்மை நசுக்கியது. அடிமைகளாக ஒடுக்கப்பட்டவர்கள் நிரந்தர அடிமைகளாகவோ ஒடுக்கப்பட்ட இனமாகவோ வாழ்ந்ததாக சரித்திரமே இல்லை. அவர்களுக்கும் ஒரு விடிவுகாலம் உண்டு. தமிழினத்தின் ஒடுக்கப்பட்ட இனமாக இதுவரை வாழ்ந்த எமக்கு விடிவுகாலம் ஏற்பட்டுவிட்டது. நம்மை தனியினமாக்கிக்கொள்ள வழிசெய்துவிட்டது தமிழினம். நாம் தனியினமாக எம்மைப் பிரகடனப்படுத்த வேண்டும் எனக் கோருவதற்கு பெரும்பான்மைத் தமிழர்களே பொறுப்பாளிகள்.''

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் உடுவில் கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்தில் உரையாற்றிய மகாசபைநிர்வாகச் செயலாளர் திரு. எஸ். செல்லையா மேற்கண்டவாறு கூறினர்.

அங்குரார்ப்பணக் கூட்டத்திற்கு காசபை உபதலைவர் திரு. எஸ் ஜே. துரைசிங்கம் தலைமை வகித்தார்.

பொருளாளர் திரு. இராசையா மற்றும் திருவாளர்கள் செ. அப்புத்துரை. கே மாரிமுத்து ஆகியோரும் மகாசபையின் சேவைகளை எடுத்துக் கூறினர்.

உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்-திரு செ அப்புத்துரை, ஜே. பி, உபதலைவர்-திரு எஸ் சிவபாதம். செயலாளர்- திரு எம பொன்னுத்துரை, உபசெயலாளர்- திரு எஸ் தர்மலிங்கம், பொருளாளர்-திரு எஸ் அருச்சுனன். நிர்வாகசபை உறுப்பினர்கள் ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒவ்வோர் உறுப்பினர் தெரிவு செய்யப்பட்டனர்.

வியாபாரம்பெருக விளம்பரம் செய்க

## ரஷ்யாவில் கிரி

மாஸ்கோ, செப். 25

ரஷ்யாவிற்கு விஜயம் செய்துள்ள இந்திய குடியரசுத் தலைவர் திரு வி. வி. கிரி இரண்டாவது முறையாக பொட்கர்ணியை இன்று சந்தித்தார்

இப் பேச்சு வார்த்தையின் பொழுது. இந்திய எல்லைகள் சிலவற்றை சீனாவின் பகுதியாக ரஷ்யா சில வரைபடங்களில் தெரிவித்துள்ளமைபற்றி திரு. கிரி, பொட்கர்ணியுடன் பேசியதாகத் தெரிகிறது.

மேற்காசியாவில் ரஷ்யாவின் நிலை என்ன என்பது பற்றி திரு. பொட்கர்ணி விளக்கியதாக அறியப்படுகிறது.

அரசியல் பொருளாதார நிலைகளை சிறிய நாடுகள் மீது சுமத்தக் கூடாதென்பதே இந்தியாவின் உறுதியான கருத்தென இந்தியக் குடியரசுத் தலைவர் வலியுறுத்தினார்.

'ஈழநாடு'
வாரமலரில்
மற்றுமொரு
புதிய அம்சம்
'எங்கள் கிராமம்'
தங்கத் தாத்தாவின்
சொந்தக் கிராமமான
நவாலியுடன்
ஆரம்பித்து வைக்கிறார்
பிரபல எழுத்தாளர்
வி. என். பி,
29-9-70 ''ஈழநாடு'' வார மலரில்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

உபயோகமான, மனித குலத்தின் வாழ்க்கைக்குப் பயன்படும் ஏதேனும் உண்டாக்கப் பயன்படும் உழைப்பே உண்மையான உழைப்பு

— மகாத்மா காந்தி.

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna:
Post Box: 49, Jaffna. Telephone: 889.

[illegible] சாதாரண வருஷம் புரட்டாசி மாதம் 10-ந் திகதி (26-9-70)

## தேசிய வீரர் பண்டாரநாயகா

ஈழத்தின் தேசிய விடுதலை வீரர்களில் ஒருவரான திரு எஸ். டபிள்யு. ஆர். டி பண்டாரநாயகாவின் நினைவுநாள் இன்று திறமை மிக்க அவரது மனைவியார், அவர் விட்டுச் சென்ற அதே பிரதமமந்திரியின் பதவியில் இருந்து நல்ல தொண்டாற்றி வரும் இச் சமயத்தில் இந்தத் தினம் இலங்கையில் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அப் பெரியாரின் குணவிசேஷங்களையும் சாதனைகளையும் இப்போது நினைவு கூர்வது பொருத்தமாகும்.

நல்ல குடியில் பிறந்த திரு. பண்டாரநாயகா மேலை நாடு சென்று கல்வி கற்று, தமது அறிவாற்றல்களையெல்லாம் தமது தாய் நாட்டின் விடுதலைக்காகவும் மேன்மைக்காகவும் அர்ப்பணித்தார். ஆணித்தரமான தமது பேச்சுத் திறமையை, அமைதியான முறையிலே நாட்டுக்கு விடுதலை பெற்றுத்தரவும், பின் ஜனநாயக வழியிலே முன்னேறவும் பயன்படுத்தினார். கத்தியின்றி இரத்தமின்றி இலங்கை ஏகாதிபத்திய அடிமைத்தளையைத்தகர்த்து வல்லரசுக் கோஷ்டிகளில் சிக்காமல் சோஷலிசப் பாதையில் செல்ல முடிகின்றதெனின் அதற்கு திரு. பண்டாரநாயகா செய்த தொண்டுகள் பெரிதும் காரணமாகும்.

தீவிர அரசியல்வாதியான அவரது ஆட்சியைப் பற்றி சிலர் குற்றங் குறைகள் கூறலாம். அரசியலில் ஈடுபட்ட யார்தான் இவ்வித புகார்களிலிருந்து தப்பமுடியும்? ஆனால் நாடு ஒற்றுமைப்பட்டு அதிலுள்ள அனைவரும் நல்வாழ்வு வாழ வேண்டுமென்பதிலும், உலக நாடுகளிடையே இலங்கை தலைநிமிர்ந்து முன்னேற வேண்டுமென்பதிலும் அவருக்கிருந்த பேராவலை அவரது அரசியல் எதிரிகளும் கூட மறுக்கமுடியாது.

ரஷ்யாவையும் புதுசீனத்தையும் அங்கீகரித்து அவற்றுடன் அரசியல் உறவுகள் கொண்டு உண்மையில் மத்தியவழியைப் பின்பற்றினார். இந்தியாவில் பிரதமராக இருந்த நேருஜிக்கு உற்ற நண்பராக இருந்தவர். இலங்கைக்கும் இந்தியாவுக்கும் சில சிக்கல்கள் இருந்தாலும், பொதுவாக அரசியலில் இரு நாடுகளுக்கும் நல்லுறவும் ஒத்துழைப்பும் நீடித்து வருவதற்கு அவர் பெரிதும் காரணமாவார். இந்தக் கொள்கையை இப்போது பிரதமரான அவரது துணைவியாரும் பின்பற்றி வருவது குறிப்பிடத்தக்கது. மகாத்மா காந்தி காட்டிய வழியில் கையால் நூற்று கைத்தறியில் நெய்யும் கதர்த் துணியை வியாங்கொடையில் அவர் உற்பத்திசெய்து பல ஆண்டுகள் கதரே உடுத்தி தமது எளிமையையும் நாட்டுப் பற்றையும் காட்டினார்.

தமது அரசியல் வாழ்விலே பெரிய சோதனையும் திருப்பமும் ஏற்பட்டபோது, அதாவது ஐக்கியதேசியக் கட்சியிலிருந்து விலகுவதா இல்லையா என்று திகைத்த போது தமக்கு சரியான வழிகாட்டியது பகவத் கீதையே என்றும், "கடமையைச் செய். பலாபலனைக் கருதாதே" என்ற கீதா உபதேசத்தைப் பின்பற்றவும் தமக்கு ஐ. தே. கட்சியிலிருந்து விலகி ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை ஆரம்பிக்கும் துணிச்சல் வந்ததாகவும் அவர் தமது நண்பரும் கொழும்பு அப்புக்காத்தும், ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் முன்னாள் உபதலைவருமான திரு ஏ. ஸி. நடராசாவிடம் தெரிவித்துள்ளார். இவ்விவரங்கள் அடங்கிய அரிய கட்டுரை இதே பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. திரு. பண்டாரநாயகா, அச்சமயம் அவ்விதம் செய்திராவிடில்,

## இன்று நினைவு தினம்

# அமரர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா

காலஞ்சென்ற திரு. பண்டாரநாயக்காவின் அரசியல் வாழ்விலே பெரிய நெருக்கடி ஏற்பட்டு, ஐ. தே கட்சியில்இருப்பதா, அல்லது விலகுவதா என்று திகைத்திருக்கையில் அவருக்கு ஒரு புதுத்துணிச்சல் அளித்து நேர்வழிகாட்டியது பகவத்கீதை தானும். "உன்னுடையகடமையைச்செய். பலனைக்கருதாதே' என்ற கீதா வாக்கியம் தான் எனக்கு துணிவைத்தந்து ஐ. தே. கட்சியிலிருந்து விலகச் செய்தது" என்று தமது நண்பரும், முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உபதலைவருள் ஒருவருமாக இருந்த அப்புக்காத்து திரு. ஏ. ஸி நடராசாவிடம் கூறினாராம்.

பண்டாரநாயக்கா அவர்களின் தினத்தை முன்னிட்டு திரு நடராசா அத்தலைவரைப்பற்றி பல ருசிகரமான தகவல்களை இக் கட்டுரையில் தருகின்றார்.

"நாம் ஒருவர் கருத்தை ஒப்புக் கொள்ளாமல் இருக்கலாம். ஆனால் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு, இந்தப்புதிய துணிகரமான உலகில், ஓர் ஆனந்தம் மிக்க. செல்வாக்கான வாழ்க்கையைப் பெற எல்லோருக்கும் நாம் உதவி புரிவோமென நம்புவோம்"

இவை 2-12-57ல் நடந்த காமன்வெல்த் பாராளுமன்ற மகாநட்டில் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா பேசிய வார்த்தைகள்? இரண்டு ஆண்டுகள் முடியுமுன்னரே இப்பெரியார் பிரதமர் பதவியிலிருக்கும் போதே- ஒரு கொலைஞனின் துப்பாக்கி, அவரது இந்நம்பிக்கையைப் பொய்யாக்கி விட்டது. மகா முதலியார் சேர் சொலமன் டயஸ் பண்டாரநாயக்காவின் புதல்வராகிய திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அமரராகி இன்றுடன் 11 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன. அவர் நற்பண்பு நிரம்பியவர்; இந்நாட்டின் சேவையில் தம்வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்தவர்!

இலங்கையிலுள்ள ஒவ்வொரு அரசியல் கட்சியும் தாம் பண்டாரநாயக்காவின் கொள்கையைப் பின்பற்றுவதாகப் பிரகடனம் செய்வது இதற்குஆதாரம் காட்டுவதுமன்றி, அவரது முன்யோசனைக்கும், அறிவுக்கும் ஒரு புகழ்மாலையாகவும் அமைகின்றது

இங்கிலாந்தில் "ஒக்ஸ் போர்ட்டில்' பயின்று இலங்கைக்குத் திரும்பிய இவர், நியாயவாதியாகத் தொழில்

[illegible]ததில் அவர் ஆற்றிய சொற்பொழிவு தனிச் சிறப்பு வாய்ந்தது.

### பொதுவுடமை வாதி

திரு பண்டாரநாயக்கா ஒக்ஸ்போர்ட்டிலிருந்து 1925 ம் ஆண்டு திரும்பிய பொழுது தாராள மனப்பான்மையுள்ள ஒரு பொதுவுடமைவாதியாக இருந்தார் இவ்வகையில் அவர், பிரித்தானிய அரசகுடும்பத்தினரோடும் பிரபுக்களுடனும் பழகுவதில் பெருமகிழ்ச்சியடைந்து, ஆங்கிலேயனைப் போல வாழ்ந்து வந்த, அவரது தந்தையிலிந்தும் மாறு

குப்போகு முன்னர் அவர் செய்த சொற்பொழிவில் 'சிறுவயதிலிருந்தே என்னால் முடிந்தவரையில் எனது நாட்டிற்குச் சேவைசெய்ய வேண்டுமெனும் ஒரு தூண்டுதல் என்னுள்ளே ஊன்றியிருப்பதை உணர்ந்தேன். இதுஏறக்குறைய ஓர் அர்ப்பண உணர்ச்சியளவுக்கு இருந்தது' என்றார். அவர் தொடர்ந்து கூறுகிறார்.

"இலங்கை சுதந்திரம்அடைந்தபோது எங்களுக்கு உள்நாட்டுச் சிக்கல்கள் ஒன்றுமிருக்கவில்லை; எங்கள்பணப் பெட்டிகள் நிரம்பி வழிந்து கொண்டிருந்தன" இதே சொற்பொழிவில் சுதந்தி

### திரு. ஏ. ஸி. நடராசா

பட்டவராக இருந்தார். தேசிய உடைப்பிரியரான இளம் பண்டாரநாயக்கா தன்னைத் தேசத்திலுள்ள சாதாரண மக்களுள் ஒருவராக ஆக்கிக் கொண்டார் அவர்காலந் தொட்டு அரசியல்வாதிகளிடையே தேசிய உடை முன்னில்லாத மதிப்பைப் பெற்றிருக்கின்றது இதனை 1956க்குப் பின் மேலும் தெளிவாகக் காணலாம்.

பொது மக்களுக்கே இந் நாடு சொந்த மென்பதையும்இதை ஆளும்வகையைத் தீர்மானிக்க அவர்களுக்கு முழு உரிமையுண்டு என்பதையும் பொதுமக்கள் உணருபடி செய்ததே அவர் இலங்கையில் [illegible] மாற்றங்களுள் [illegible]துவம் வாய்ந்தது. திரு.

ரம் கிடைத்தகாலம் நாடு இருந்தநிலைமை, 'எங்களின் முக்கியமான பிரச்னைகள் பலவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு ஏற்ற ஒரு பொன்னான தருணம்; ஆனால் இந்த வாய்ப்பு வீணாக்கப்பட்டு விட்டது. இனிக் காலம் போகப்போகஇ பிரச்னைகளுக்குத் தீர்வுகாண்பதுமேலும் மேலும் கடினமாகும்" என அவர் வருந்தினார், இது கூறப்பட்டு இருபது வருடங்களின்பின், இப்போதும் இச்சொற்கள் எவ்வளவு உண்மையானவை என்பதை நாம் உணரக் கூடியதாக இருக்கிறது.

அவரது புதுக்கட்சியாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைத் தொடக்கு முன்னர் அவர் எங்களில் அதாவது கொழும்பிலுள்ள நியாய வாதிகளில் சிலரைத் தம்வீட்

டாரநாயக்காவையே குற்றவாளியாகக் கருதினர். இக் கலவரங்கள் ஏற்படாமல் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் தாம் எடுக்கத் தவறியதற்குக் காரணம் பொலிசார் கொடுத்த தவறான தகவல்களேயெனவும் தமக்கு அது நடந்தது பற்றி மிகுந்த வருத்தமெனவும் பின்பொரு நாள் எனக்குச் சொன்னார். தமிழருக்குக் கெடுதியெதுவும் செய்யாமலிருக்கவே தம்மால் இயன்றவளவில் அவர் முயன்றார். தமது ஆதரவாளர்கள் எதிர்ப்புக்கிடையிலும் தமிழ்மொழி மசோதாவைச் சட்டப் புத்தகத்தில் அவர் சேர்த்ததை நாம் மறக்கமுடியாது.

### சமாதான விரும்பி

திரு. பண்டாரநாயக்கா அடிப்படையில் ஒரு சமாதான விரும்பி. ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுவதாலும் நிந்தனை செய்வதாலும் இலாபமொன்றுமில்லை என்பது அவர் கருத்து. 8-11-57இல் இலங்கைப் பல்கலைக்கழகத்துப் பட்டமளிப்புவிழாவில் பேசும் போது, "இன்று நாமெல்லோரும் ஒருவர். சாதியினாலோ, கொள்கையினாலோ, பாஷையினாலோ, பொருளாதாரத்தினாலோ, சமூகத்தினாலோ, வேறெதினாலோ நம்மிடையே ஒருவரிலொருவருக்குள்ள வெறுப்புக்களை நாம் ஒன்றாக வாழ இயலாதெனும் நிலை வருமளவுக்கு நாம் வளர விடக்கூடாது. உலகம் முழுவதும் இப்பொழுது மிக நெருங்கியிருப்பதால் நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் ஒன்றாக வாழவேண்டும் அல்லது ஒன்றாக மாளவேண்டும்" என்றார்.

எங்கள் நாட்டின் முன்னேற்றத்திற்கு இந்நாட்டு மக்களிடையே ஒற்றுமை அத்தியாவசியம் என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும் இன்று உணர்கின்றன. இலங்கைத் தலைவர்களில் திரு. பண்டாரநாயக்கா ஒருவரே. இவ்வொரு

நாயக்காவும் அவ்வாறே. வேறு பல இலங்கைப் பிரதமர்களின் பெயர்கள் மறைந்த பின்னரும் திரு. பண்டாரநாயக்காவின் பெயர் இலங்கைச் சரித்திரத்தில் நிலைத்து நிற்பதன் இரகசியமும் இதுவேயாகும்



## பொய்யர் புளுகினை சாகடித்தோன்!

— ஆ. கல்யாணசுந்தரேசன் —

நாட்டிடைச் செல்வத்தை நமக்களித்தீர் — அதை
நம்மவர் பங்கிடக் களித்திருந்தீர்
போட்டி பொறாமையைப் போக்கடித்தீர் — இங்கு
பொய்யர்தம் புளுகினைச் சாகடித்தீர்.

சாதிகள் நாட்டினில் உண்டென்றால் — அந்தச்
சனியனை ஓட்டிட முன்னின்றார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டுமென்பதிலும், உலக நாடுகளிடையே இலங்கை தலைநிமிர்ந்து முன்னேற வேண்டுமென்பதிலும் அவருக்கிருந்த பேராவலை அவரது அரசியல் எதிரிகளும் கூட மறுக்கமுடியாது. ஆசியாவின் ஸ்விட்ஸர்லந்தாக நம் நாடு பொலிய வேண்டுமென்ற தமது விருப்பத்தை வெளிப்படையாகக் கூறியதுடன், அந்நாட்டு சமஷ்டி அரசியல் முறை இலங்கைக்கும் உகந்ததாகுமென்றும்கூட ஒரு சமயம் கருதினர் அவர். சிங்களமும் தமிழும் இலங்கையின் அரசாங்க மொழிகளாக இருக்கவேண்டுமென்ற கருத்தையும் அவர் அப்போது ஆதரித்தார். ஆனல் பின்னர், அவர் தமது இந்தக் கருத்துக்களை மாற்றிக்கொள்ள நேரிட்டிருப்பின் அதற்குக் காரணம் அரசியல் சந்தர்ப்ப சூழ்நிலைகளும் வேறு சில சுயநல அரசியல்வாதிகளும் தான். அவரது விருப்பப்படி காரியம் செய்யக்கூடியதாக இருந்திருப்பின் இந்நாட்டின் அரசியல் போக்கே வேறு நல்லவிதமாக இருந்திருக்கும்.

வெளிநாட்டுக் கொள்கையைப் பொறுத்தவரை அவர் எஸ். நடராசாவிடம் தெரிவித்துள்ளார். இவ்விவரங்கள் அடங்கிய அரிய கட்டுரை இதே பக்கத்தில் பிரசுரமாகியுள்ளது. திரு. பண்டாரநாயகா, அச்சமயம் அவ்விதம் செய்திராவிடில், இன்று அவரது துணைவியார் பிரதமராக இருக்க முடியுமா? சுயநலன் எதுவுமின்றி, மற்ற அரசியல் தலைவர்களும் எவ்விதம் தங்கள் கடமையைச் செய்ய வேண்டுமென்பதற்கு துணிச்சலுடன் வழிகாட்டியுள்ளார் அவர். தமக்குப் பின் தமதுபணியை மேற்கொண்டு செய்ய தமது துணைவியாரை விட்டுச் சென்றதற்கும் அவருக்கு நாடு நன்றிசெலுத்தக் கடமைப்பட்டுள்ளது. தமது புகழ்பெற்ற கணவரின் உள்ளக் கிடக்கையை நன்குணர்ந்த அவரது பத்தினியாரான ஸ்ரீமா அவர்கள், அப்பாதையில் சென்று நாட்டில் சமூக ஒற்றுமையையும் சோஷலிசத்தையும் நிலைநாட்ட எல்லா முயற்சிகளையும் செய்வராயின், அதுவே அவரது கணவரான பண்டாரநாயகாவின் ஆத்மாவுக்குப் பெரும் மகிழ்ச்சியும் சாந்தியும் அளிப்பதாக இருக்கும்.

## நினைவுதினம்

நல்லூர், வியாழ.

யாழ் அரசாங்க செயலகத்தில் பண்டாரநாயக்கா நினைவுதினம் கொண்டாடுவதற்கான ஒழுங்குகளை யாழ் அரசாங்க அதிபர் திரு எம். ரி. டபிள்யூ அமரசேகரா மேற்கொண்டுள்ளார். இன்று மாலை 5 மணிக்கு யாழ் அரசாங்க செயலக ஆலோசனைக் கட்டிடத்தில் நடாத்தப்படவிருக்கும் விழாவில் இந்த நாட்டிற்கு காலம் சென்ற திரு. எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா ஆற்றிய சேவைகள்குறித்து சமயத்தலைவர்களும், பொதுமக்களும் உரை நிகழ்த்துவார்கள்.

## இதுதான் சரி

கொழும்பு, சனி

இலங்கை பல்கலைக்கழக பொறியியல்துறை முதல் வருட பரீட்சை முடிவுகள் ஈழநாடு பத்திரிகையில் வெளியாகியிருந்தன. அதில் திரு எஸ். அருளம்பலம் என்றிருப்பது எஸ் அருமைநாதர் என்றிருக்கவேண்டும்

## உதவி ஒலி பரப்பு...

1-ம் பக்கத் தொடர்ச்சி

தக் கொள்கை அரசியல் வேறுபாடுடையவர்களாக இருப்பினும் தேசிய நோக்குடன் அவரைக் கௌரவிக்க வேண்டும்,

தேசியத் தலைவர்களை மதிக்காதவர்கள் தேசாபிமானத்திலும் தேசபக்தியிலும் அக்கறையுள்ளவர்கள் என்று கருதமுடியாது. ஈழம் பெற்றெடுத்த தலைப்புதல்வனும் தேசியத்துக்கு வித்திட்டவருமான காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்காவைக் கௌரவிக்க நாட்டு மக்கள் அனைவரும் முன்வர வேண்டும்,

## தேவை

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பத்திரிகை விநியோகம் செய்வதற்கும், பத்திரிகை மடிக்கவும் சயிக்கிள் உள்ள பையன்கள் தேவை. நேரில் 28-9-70 திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு வரவும். நிர்வாகி, 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 2474

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 26-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

யோசனைக்கும், அறிவுக்கும் ஒரு புகழ்மாலையாகவும் அமைகின்றது

இங்கிலாந்தில் 'ஒக்ஸ் போர்ட்டில்' பயின்று இலங்கைக்குத் திரும்பிய இவர், நியாயவாதியாகத் தொழில் புரியத் தொடங்கியிருந்த போதிலும் இந் நாட்டின் அரசியல், சமூக வாழ்க்கையிலேயே அவரது கவனம் கூடுதலாகச் சென்றது.

1927ம் ஆண்டு அவர் பல்கலைக் கழகக் கல்லூரி மாணவர்களுக்குச் செய்த சொற்பொழிவொன்றின் போது அவரை நான் முதல் முதலாகச் சந்தித்தேன். அன்றும் மாணவர்கள் பிரசங்கியைக் கேள்வி கேட்டுக் குழப்பும் வழமையான விளையாட்டில் ஈடுபட்டனர். திரு. பண்டாரநாயக்கா, தான் அவர்களது செய்கையைப் பண்பற்ற பழக்கவழக்கமாகக் கருதுவதாகக்கூறி, மாணவர்களுக்குப் பதிலடி கொடுத்தார், இந்த நிகழ்ச்சி என்மனதில் அவரைப்பற்றி ஒருகுறைந்த அபிப்பிராயத்தை உண்டாக்கியதென நான் பின்னொரு முறை அவருக்குக் கூறிய பொழுது, அவர் தமக்கும் அந்நிகழ்ச்சி நினைவிருப்பதாகவும், அன்று மாணவர்கள் தம்மை வேண்டுமென்றே ஆத்திரமூட்ட முயற்சித்தார்களெனத் தான் நம்பியதாகவும் கூறினர். பொதுமக்களோடுள்ள அனுபவம் கூடக்கூட அவர் சபையோரோடு நடந்து கொள்ளும் முறையில் சாதுரியத்தையும் பொறுமையையும் வளர்த்துக் கொண்டார், பெருந்திரளான மக்களைக் கொண்டு நடத்துவதில் அவர் பெரிதும் கைதேர்ந்தவரானர். பொது மேடைப்பேச்சாளனுக அவர் பெற்றிருந்த பெருந்திறமையினுலும், அவரது உன்னதமான நகைச்சுவை உணர்ச்சியினுலும் பெரும் பெரும் சபையினர்களுக்கு முன்னுல் நிதானமாகவும் இயற்கையாகவும் நடந்து கொள்ளக் கூடியதாக இருந்தது, எத்தனையோ சந்தர்ப்பங்களில் அவர் பேசியதைக் கேட்டிருக்கின்றேன்-ஆனல் 1948ம் ஆண்டு பெப்ரவரி 4ம் திகதி சுதந்திரதினக் கொண்டாட்

## இன்று

இன்று யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையினர் யாத்திரிகர் கோஷ்டியை சபை மண்டபத்தில் வரவேற்பர். பிற்பகலில் யாத்திரிகர் கோஷ்டியைச் சேர்ந்த ஓதுவார்களான திரு. பட்டுசாமி, தண்டபாணி ஆகியோரின் திருமுறைக் கச்சேரியும் சொற்பொழிவும் சைவபரிபாலன சபை மண்டபத்தில் நடைபெறும்.

...முழு உரிமையுண்டு என்பதையும் பொதுமக்கள் உணரும்படி செய்ததே அவர் இலங்கையில் ஏற்படுத்திய மாற்றங்களுள் மிகமுக்கியத்துவம் வாய்ந்தது. திரு. பண்டாரநாயக்கா எவருடன் பேசும்போதும் தான் மற்றவருக்குச் சமமானவர் போலவே பேசுவர். அவரின் முன்னிலையிலிருக்கும் போது, 'நான் குறைந்தவன்' என எவருமே எண்ணக்கூடியதாக அவர்நடப்பதில்லை.

1927ல் திரு. பண்டாரநாயக்கா கொழும்பு நகரசபை அங்கத்தவராகத் தம் அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார். 1931ல் டொனமூர்த் திட்டத்தின்படி சட்டசபை நிறுவப்பட்ட பொழுது அவர் வியாங்கொடைப் பகுதிக்கு எதிர்ப்பின்றித் தெரிவு செய்யப்பட்டார். 1936ம் ஆண்டுத் தேர்தலும் இதேபோலவே அமைந்தது. அமைச்சரவையில் ஒருவராகவும் உள்நாட்டாட்சி நிர்வாகக் குழுவின் தலைவராகவும் பதவி ஏற்றார். 1947ம் ஆண்டு அத்தனகலையின் ஐக்கிய தேசியக் கட்சி அங்கத்தவராக ஏறக்குறைய 27.000 அதிகப்படியான வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுச் சுகாதார, உள்நாட்டு அமைச்சராகினர். 1952லும் 1956லும் நடந்த தேர்தல்களில் முறையே அவர் பெற்ற 32,544 அதிகப்படி வாக்குகளும் 41,997 அதிகப்படிவாக்குகளும் இன்றும் முறியடிக்கப்படாத சாதனைகளாகும்.

## பகவத்கீதை தந்ததுணிவு

திரு பண்டாரநாயக்காவின் வாழ்க்கையில் அவர் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகியது முக்கியத்துவம் வாய்ந்த தொன்றாகும். இதனைப் பற்றி அவர் என்னோடு பேசும் போது, சிலகாலமாகவே தாம் இதனைச் செய்ய எண்ணிக் கொண்டிருந்ததாகவும் அந்தச் சமயத்தில் தாம் பகவத்கீதையை வாசிக்க நேர்ந்ததாகவும், 'உன்னுடைய கடமையைச் செய், பலாபலனைக்கருதாதே' எனும் கருத்தை மையமாகக் கொண்ட கீதையே, தமக்கு வெளியில் என்ன கதி காத்திருந்தாலும்சரி என்ற துணிவைத் தமக்குத்தந்து தம்மை ஐக்கிய தேசியக் கட்சியை விட்டுவிலகச் செய்தது என்றும் கூறினர்.

1951ம் ஆண்டு ஜூலை மாதம் 12ம் திகதி அவர் அரசாங்கக் கட்சியிலிருந்து விலகி எதிர்க் கட்சியை சேர்ந்தார். மறுபக்கத்திற்

தாக இருக்கிறது.

அவரது புதுக்கட்சியாகிய ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியைத் தொடக்கு முன்னர் அவர் எங்களில் அதாவது கொழும்பிலுள்ள நியாயவாதிகளில் சிலரைத் தம்வீட்டிற்கு அழைத்திருந்தார். அங்கேயே இரண்டு மூன்று கூட்டங்கள் கூடிய பின்னர் அவர் தொடக்க எண்ணியிருந்த கட்சியில் சேர்வதாக எங்களில் பலர் தீர்மானித்தோம். அந்நேரம் ஐக்கிய தேசியக்கட்சி அதிக பலம் பெற்றிருந்தது. ஆனல் பொதுமக்களின் கருத்துக்களுக்கு அது அதிக கவனமளிக்காதிருந்தது.

ஆரம்பகாலத்தில் இலங்கை சுதந்திரக்கட்சி பல உன்னதமான கொள்கைகளை உடையதாக இருந்தது. தொடக்கக் காலத்தில் அரசியற் சந்தர்ப்பவாதத்திற்கும் பதவிக்காகச் செய்யும் சூழ்ச்சிகளுக்கும் அங்கே இடமிருக்கவில்லை. திரு பண்டாரநாயக்காவின் பொதுவுடைமைக் கொள்கை பொதுமக்களின் தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ப அமைந்திருந்தது: புத்தரின் போதனைகளுக்கிணங்க அரசியலிலும் நடுப்பாதையே கூட விரும்பத்தக்கதாக இருந்தது.

## மொழியும் பிரதேசமும்

திரு. பண்டாரநாயக்காவின் அரசியல் வாழ்க்கையில் முக்கியத்துவம் பெற்ற விஷயங்கள் இரண்டு. ஒன்று பிரதேச சபைகள். இதற்கு அவர் சட்டசபையில் மந்திரி பதவியேற்ற காலத்திலிருந்தே அடிகோலத் தொடங்கிவிட்டார். மற்றது பாஷைப் பிரச்னை. இவ்விரு விஷயங்களிலும் கருத்து வேறுபாடிருப்பதால் இவற்றை இங்கு நான் விபரித்துக் கூறவில்லை.

இரு பிரஜாவுரிமைச் சட்டங்களாலும் சிறுபான்மையினரிடையே ஏற்படும் பிரச்னைகளைப் பற்றி ஒருநாள் நாம் விவாதித்துக் கொண்டிருக்கும்போது ''கஷ்டங்களெல்லாம் அவ்வளவாக அச்சட்டங்களால்ல, அவற்றைச் சில சமயங்களில் அமுல் நடத்தும் முறையினுலேயே உண்டாகின்றன'' என திரு. பண்டாரநாயக்கா கூறினர். இவ்விஷயத்தைப் பொறுத்தவரையில் காலப்போக்கில் நல்லதொரு ஆட்சி வகுப்பினர் வருவார்களென நம்புவதைவிடப் பொதுமக்களாகிய எம்மால் வேறொன்றும் செய்ய முடியாது.

1958-ம் ஆண்டின் இனக்கலவரங்களுக்குத் தமிழர்கள் பொதுவாக திரு. பண்

மக்களிடையே ஒற்றுமை அத்தியாவசியம் என்பதை ஒவ்வொரு அரசியல்வாதியும் இன்று உணர்கின்றன. இலங்கைத் தலைவர்களில் திரு. பண்டாரநாயக்கா ஒருவரே, இவ்வொற்றுமைமை உண்டாக்கத் தகுதி வாய்ந்தவரும் இன்றிருந்தால் உண்டுபண்ணியிருக்கக்கூடியவரும் ஆவர். 1955ல் கட்சியின் மொழி உபகுழுவைப் பேட்டி காண வந்த ஒரு கூட்டத்தினரின் தலைவரான ஒரு கலகக்கார புத்தகுரு தாங்கள் நாட்டின் சிறுபான்மையினரைத் தங்களுக்குச் சட்டம் விதிக்கவிட முடியாது என்ற பொழுது திரு. பண்டாரநாயக்கா தாம் தமது பாஷையை விரும்பாத மக்களிடம் திணிக்க ஒருப்படமாட்டாரெனக் காரசாரமாகப் பதிலிறுத்த ஒரு சந்தர்ப்பம் என் நினைவிலிருக்கிறது.

உன்னதமானகொள்கைகளையுடைய ஏபிரகாம் லிங்கன் அக்கொள்கைகளுக்காக தன் உயிரை அர்ப்பணித்தார். மகாத்மா காந்திஜியும் அப்படியே. திரு. பண்டார

## ஆசிரியைக்கு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆசிரியர் உதவி ஆசிரியை ஆகியோரின் சாட்சியங்களைப் பதிவுசெய்தபின் பிரேதபரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பளிப்பதை ஒத்திவைத்திருந்தார். சிறுமியின் மரணம் சம்பந்தமாக பொலிசாரைப் புலன் விசாரணைசெய்யும்படி உத்தரவிட்டிருந்தார்.

பொலிசார், உதவி ஆசிரியையின் வேலைக்காரச்சிறுமியான மீனாட்சியையும்நீண்ட நேரம் விசாரணைசெய்தனர்.

பிரேதபரிசோதனைசெய்த டாக்டர் கொடுத்த அறிக்கையில் சிறுமி கிணற்றுள் விழுந்ததனுல் இறக்கவில்லையென்றும் சிறுமியின் வயிற்றுக்குள் தண்ணீர் இருக்கவில்லையென்றும் தெரிவித்தார்.

விசாரணையின்பின் உதவி ஆசிரியை திருமதி ரேஸ் சக்காரியாவை 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்து அடுத்த மாதம் 8-ந் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மரணவிசாரணை அதிகாரி உத்தரவிட்டார். சிறுமியின் மரணம் சம்பந்தமாகத் தொடர்ந்து புலன் விசாரணை செய்யுமாறு பொலிசாருக்கு திரு. இராசநாயகம் உத்தரவிட்டார்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. இராஜேஸ்வரன் இம் மரணம் சம்பந்தமாக புலன் விசாரணையை மேற்கொண்டுள்ளார்.

நம்மவர் பங்கிடக் களித்திருந்தீர்
போட்டி பொறாமையைப் போக்கடித்தீர்— இங்கு
பொய்யர்தம் புளுகினைச் சாகடித்தீர்.

சாதிகள் நாட்டினில் உண்டென்றால்—அந்தச்
சனியனை ஓட்டிட முன்னின்றார்
நீதியும் நேர்மையும் நிறைந்திருந்தார்—சம
நிலையான உளமதில் உறைந்திருந்தார்.

ஆசியஜோதி நேருமகான் — உமை
அன்புடன் அணைத்த வீரமகான்
காசினி காத்திடக் கரம்பிடித்தான்—உந்தன
கருத்தினை என்றுமே காத்துநின்றான்.

பஞ்சமும் வஞ்சமும் பாரகல—பசும்!
பஞ்சசீலக் கொடி பறக்கவென்றாய்
அஞ்சலும் துஞ்சலும் ஆசியவாசிக்கு—இனி
அறவே ஆகாது என மொழிந்தீர்.

தேசமெங்கும் மகிமை கொண்ட
தேசியத்தைக் காட்டினன்
தேச பக்தர் கொண்டதொரு
தேவர் படை ஆக்கினன்
நீசரெங்கும் நின்றுருக
நீலக்கொடி நாட்டினன்
நஞ்சையள்ளும் பேச்சினலே
நேசக் கரம் நீட்டினன்.

## சுவீப் முடிவுகள்

கொழும்பு, வெள்ளி

நேற்று அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட தேசியசுவீப் முடிவுகள் வருமாறு:

(முதலாவது பரிசு)

39 N 0269 ரூ. 97,930

(இரண்டாவது பரிசு)

10 J 0449 ரூ. 39.172

(மூன்றும் பரிசு)

01 O 0982 ரூ. 9,793

தலா ரூபா 489 65 சதம் பெறும் 100 டிக்கட்டுகளின் விபரம்:

| | |
|---|---|
| 14 A 0333 | 07 A 0200 |
| 16 A 0308 | 34 A 0996 |
| 07 A 0173 | 09 A 0226 |
| 39 A 0674 | 13 A 0646 |
| 07 A 0649 | 22 A 0679 |
| 39 B 0490 | 28 B 0674 |
| 11 C 0074 | 36 D 0465 |
| 31 D 0911 | 01 D 0893 |
| 35 E 0572 | 38 E 0162 |
| 15 E 0453 | 01 E 0620 |
| 29 F 0160 | 33 F 0395 |
| 27 F 0041 | 01 G 0245 |
| 20 H 0959 | 27 H 0489 |
| 08 H 0972 | 02 J 0785 |
| 07 J 0134 | 01 J 0198 |
| 09 K 0895 | 34 K 0910 |
| 14 L 0198 | 16 L 0431 |
| 06 L 0286 | 15 M 0839 |
| 37 M 0698 | 16 M 0144 |
| 29 M 0263 | 13 M 0785 |
| 40 M 0550 | 08 N 0283 |
| 27 N 0695 | 06 N 0536 |
| 02 N 0709 | 19 N 0111 |
| 25 O 0830 | 11 O 0430 |
| 09 P 0653 | 18 P 0534 |
| 16 P 0554 | 15 Q 0944 |
| 26 Q 0025 | 15 Q 0201 |

| | |
|---|---|
| 15 Q 0837 | 12 R 0384 |
| 11 R 0501 | 38 R 0103 |
| 03 R 0134 | 20 R 0149 |
| 17 R 0133 | 04 R 0178 |
| 07 R 0644 | 40 R 0302 |
| 40 R 0640 | 11 S 0585 |
| 27 S 0283 | 10 S 0436 |
| 08 S 0124 | 37 S 0760 |
| 04 S 0354 | 09 T 0405 |
| 30 T 0144 | 34 T 0219 |
| 29 T 0036 | 09 U 0182 |
| 09 U 0037 | 01 U 0372 |
| 32 U 0110 | 20 U 0880 |
| 28 V 0263 | 01 V 0024 |
| 17 V 0453 | 08 V 0184 |
| 22 W 0117 | 27 W 0337 |
| 10 W 0245 | 01 X 0486 |
| 01 X 0379 | 19 X 0700 |
| 20 X 0979 | 34 X 0178 |
| 34 Y 0680 | 14 Y 0100 |
| 40 Y 0154 | 09 Y 0435 |
| 33 Z 0840 | 07 Z 0804 |
| 23 Z 0680 | 36 Z 0386 |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டியன)

## காணவில்லை

P. கந்தையா, சித்தன்குறிச்சி, பூநகரி. என்னுடைய ராக்டர் லைசென்ஸும் ராக்சும், இன்சூறன்சும் உடுப்புகளும் யாழ்ப்பாணம் கேரதீவுப் பாதையில் கைதவறிவிட்டன, கண்டெடுத்தோர் மேல் காணும் விலாசத்தாருடன் தொடர்பு கொள்ளவும் 2198

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org